THE LIFE

OF

THE HONOURABLE DIWAN BAHADUR

L. D. SWAMIKANNU PILLAI

(M.A., B.L., LL.B., F.M.U., I.S.O., C.I.E.)

1? SEP 1926
MADRAS

BY

A. SHANMUKHAM PILLAI

INTRODUCTIONS BY

THE HON'BLE DIWAN BAHADUR

SIR T. N. SIVAGNANAM PILLAI, *Kt.*,

AND

REV. FATHER BERTRAM, S.J., D.D.

PUBLISHED BY:

SELVAM & CO.

Catholic Book-sellers and Pulishers

...REET, SAINT THOMAS' MOUNT

(MADRAS.)

...] *1926.* [*Price As. 4.*

Y2W M64
N26
126425

கனம் திவான் பகதூர்

எல். டி. சுவாமிக்கண்ணு பிள்ளை,

எம். ஏ., பி. எல்., எல் எல். பி., எப். எம். யூ., ஐ. எஸ். ஓ., ஸி. ஐ. இ. அவர்களின்

ஜீவிய சரித்திரம்.

1277

திருவாளர் ஆ. ஷண்முகம் பிள்ளை
எழுதியது

வெளியீடு கர்த்தர்:

செல்வம் அண்டு கம்பெனி,

புத்தக வியாபாரிகள்,

480, சில்வர் தெரு, பறங்கிமலை.

பதிப்பு உரிமையுடையது] 1926 [விலை அணா 4.

800 009
126420

Golden & Co
Artistic Printers &
Process Engravers
Madras S.E.
Colour Printers

அணிந்துரை

இச்சரித்திரத் தலைவருடன் பல ஆண்டுகள் நெருங்கிப் பழகும் பேறு பெற்ற இச்சிறியேன், அவரது அருங்குணங் களை யறிந்து, பரிதிமுன் மின்மினிப்பூச்சி போன்ற என்னை ஒருவாறு சீர்திருத்திக்கொள்ள விரும்பினேன் !

அரசாங்க உயர்பதவியி லமர்ந்திருந்த அப்பெரியார் ஒப்பற்றதோர் கல்விக்களஞ்சியமாக இருந்ததுமன்றி, அன்பு, அடக்கம், பொறுமை, வாய்மை, ஊக்கம் முதலிய அரும் பெருங்குணங்களுக்கும் ஓர் உறைவிடமாக இருந்தார்.

நந்தமிழ் நாட்டின் தவப்பயனாகத் தோன்றிய அந் நல்லாரைத் தண்டமிழ் மக்கள் அனைவரும் தத்தம் உயர்வின் பொருட்டுப் பின்பற்றி நடத்தல் வேண்டுமென்னும் ஓரவாவி னால் தூண்டப்பெற்ற யான், இச்சிறிய நூலைத் தமிழ் நாட் டினருக்கு—முக்கியமாய் வாலிபர்களுக்கு—உதவுவான் கருதி என் சிற்றறிவுக்கு எட்டிய வரையில் பொருள்பல அமைத்துச் சுருக்கமாக எழுதி யிருக்கிறேன்.

ஆதலின், நந்தூய தமிழ்த்தாயின் வயிற்றிற் பிறந்த ஆண்மக்கள் பெண்மக்கள் ஆகிய இருபாலாரும் எனது விருப்பத்தை ஆதரிக்குமாறு வேண்டிக்கொள்ளுகிறேன். எனது வேண்டுகோள் செவ்வனே நிறைவேறுமாயின், இரண் டாம் பதிப்பை இன்னும் விரிவாக எழுத நினைத்துளேன்.

கல்வி யறிஞர் சிலர் இச்சரித்திரத் தலைவரைத் தங்கள் அன்பின் பெருக்கால் புகழ்ந்து பாடிய வாழ்த்துப்பாக்களை "அன்புமாலை" யெனும் பெயரிட்டு இந்நூலின் இறுதியில் சேர்த்துளேன்.

முதற்கண், இந்நூலை எழுதி முடித்து வெளியிடுதற்கு எனக்கு ஒரு பெருந்துணையாக இருந்து உதவிபுரிந்த, இக்கதா நாயகரின் ஆப்த நண்பரும் எனது அன்பிற்குரிய நண்பரு மாகிய திருவாளர் எம். பி. குழந்தைசாமிப் பிள்ளையவர் கட்கு நான் என்றும் கடப்பாடுடையேன்; அன்னாருக்கு எனது மனமார்ந்த வந்தனம் உரியது. இரண்டாவது, இச்

சிறியேன் வேண்டுகோட்கிணங்கி இச்சிறிய நூலுக்கு முன்னுரை யெழுதி யளித்த, உன்னத பதவியும் உயரிய கல்விப் புலமையும் விரிந்த மனமும் உடைய இருபெரும் பெரியார்கட்கும் எனது மன மொழி மெய்களான் வணக்கஞ் செலுத்தி நன்றி யறிதலான வந்தனமளிக்கின்றேன். "அன்பு" முளைத்தெழுந்து ஆலதுபோல் தழைத்திருந்த பண்புடைய பண்டைத் தமிழ்நாட்டில், இக்காலத்தில் அம்மாண்பு குறைந்து எத்துறைவாழ்க்கையிலும் மக்கட் பொதுவில் சுயநலங் காரணமாகப் பகைமையும் வேற்று மையுந் தாண்டமாடுவதைக்கண்டு என் மனம் அழலது கண்ட மெழுகதுபோல் உருகுகின்றது! ஆகவே, "அன்பு" உடையாரின் இவ்வரலாறும் இதைப்போன்ற பல நல்லார் சரிதங்களும் இக்காலத்துக்கு அகத்தியம் வேண்டப்படுவன வாகுமென்பது எனது கருத்து.

தமிழ் நாடெங்கும் அன்பு மணம் கமழ்க!

"சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி"—

—மாணிக்கவாசகர்.

அன்பெனும் பிடியு ளகப்படுமலையே யன்பெனுங்
குடில்புகு மரசே,
அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே
யன்பெனுங் கரத்தமரமுதே,
அன்பெனுங் கடத்து ளடங்கிடுங் கடலே
யன்பெனு முயிரொளி ரறிவே,
அன்பெனு மணுவு ளமைந்தபே ரொளியே
யன்புருவாம்பர சிவமே.

—இராமலிங்க சுவாமிகள்.

இராயப்பேட்டை,
சென்னை,
23—8—1926.

"அன்பன்"
ஆ—ஷண்முகம்.

முன்னுரை

I

(கனம் மந்திரி திவான் பகதூர் சர் தி. நே. சிவஞானம் பிள்ளையவர்கள் எழுதியது)

திரு. சண்முகம்பிள்ளையவர்கள் எழுதியிருக்கும் காலஞ் சென்ற உயர்திரு சாமிக்கண்ணு பிள்ளை யவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பார்வையிட்டேன். ஆசிரியர், பிள்ளையவர்களுடன் நெருங்கிப் பழகிய ஆப்த நண்பராதலின் அவருடைய சரிதத்தின் பலகூறுகளையும் உள்ளங்கசிந்து வரைந்துள்ளார். பிள்ளையவர்கள் மண்மீது உலவின காலத்தில் அவர் வாழ்க்கையில் பிறர் கண்களுக்குத் தோன்று பல குண விசேஷங்களையும் ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார். உலகம்புகழ வேளாள குலத்திலகமாய் அவதரித்த பிள்ளையவர்களின் சரிதத்தைப் படிக்குந்தோறும் அவர்பால் சிறந்த அன்பும், அவர் நற்குணங்களைப் பின்பற்றி யொழுக மனோ வூக்கமும் எவர்க்கும் உதிக்கும் என்பது திண்ணம்.

மயிலை,
21-8-1926.

தி. நே. சிவஞானம்.

1926

FOREWORD.

(By Rev. Father Bertram, S.J., B.A., D.D., Principal, Loyola College, Madras.)

Few men have received from their fellow citizens a more glowing tribute than did L. D. Swamikannu Pillai, when he was snatched from our midst, nearly a year ago. The concert of praises which arose around his grave was as spontaneous, as sincere, as generous, as unanimous as it was universal. Clearly the examples and the merits of the deceased made a powerful appeal to the speakers and to the writers who voiced public feeling on that sad occasion.

This booklet seeks to carry this appeal to the remotest corners of the Tamil Speaking Country, and to carry it in that very tongue which L. D. S. knew, loved and used so well.

It was said and repeated that L. D. S. was an inspiration to the country. Then let this booklet go forth and kindle in the minds and hearts of all, but especially of the young, the noble ambition of treading in the footsteps of this great and good man.

But let the readers note that L. D. S. never aimed at becoming great; he aimed at being good, very good; and he did become good. **Goodness gave him true greatness.**

It is not in the power of all to be great, but it is in the power of all to be good.

LOYOLA COLLEGE,
MADRAS.
31st July 1926.

F. BERTRAM, S. J.

16 SEP 1926
MADRAS

முன்னுரை

II

("லயொலா" உயர்தரக்கலூரித் தலைமைப் பேராசிரியர் ரெவரண்ட் ப்பாதர் பெர்ட்ராம், எஸ். ஜெ., பி. ஏ., டி. டி. அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியிருக்கும் முன்னுரையின் மொழிபெயர்ப்பு.)

சற்றேறக்குறைய ஓராண்டுக்குமுன் நம்மினின்றும் எல். டி. சுவாமிக்கண்ணுபிள்ளை பிரிந்துசென்றபோது அவருக்கு அவருடைய நாட்டினரிடமிருந்து கிடைத்த புகழ்மாலையைப்போன்ற பிறிதோர்புகழ்மாலை வேறொருவருக்கும் கிடைத்திராது. அவருடைய சமாதியைச் சுற்றிலுமிருந்து எழுந்த பொருத்த மிக்குடைய புகழ்ச்சிகள் பலவும் தங்குத் தடையின்றித் தாமாக வெளிப்பட்டுப் பூரணமாக இருந்தன; அது போன்றே, அவற்றின்கண் உண்மையான அன்பும், மன ஒருமைப்பாடும், தயாளகுணமும் பொருந்தி யிருந்தன.

காலஞ்சென்ற கனவானது உதாரணங்களும் தகைமையும், அத்துக்கவேளையில் பொதுஜன உணர்ச்சியைத் தெரிவிப்பான்வேண்டி பேசவும் எழுதவும் புகுந்த யாவர்க்கும் மிக்கவன்மையான ஆர்வம் அளித்தன.

இந்த ஆர்வத்தை இச்சிறிய புத்தகம் தமிழ் நாடெங்கும் அறிவிக்க விரும்பி எழுந்ததொன்றாகும்; மற்றும், எல். டி. சுவாமிக்கண்ணு பிள்ளை செவ்வனே கற்றுணர்ந்து மிக

விருப்புடன் பேசிவந்த மொழியிலேயே அந்த ஆர்வ உணர்ச்சியை இந்நூல் அறிவிக்கின்றது.

எல். டி. சுவாமிக்கண்ணு பிள்ளை இந்நாட்டுக்கு உணர்வூட்டும் ஓர் உதாரண புருஷனாக இருந்தாரென்று பலரும் பேசினார்கள். அவ்வாறாயின், இச்சிறுநூல் எங்கணும் பரவி எல்லாருடைய இருதயத்திலும் அவ்வுணர்வை யுண்டாக்குக! ஆனால், ஒரு சிறந்த பெரியாரும் நல்லாருமாகத் திகழ்ந்த அக்கனவானுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடத்தல் வேண்டுமென்னும் சீரிய விருப்பத்தை இப்புத்தகம் முக்கியமாய் வாலிபர்கள் இதயத்தில் உண்டாக்குக!

ஆனால், வாசகர்கள், எல். டி. சுவாமிக்கண்ணு பிள்ளை தாம் ஓர் உயர்ந்த (பெரிய பதவிபெற்ற) மனிதனாக வேண்டுமென ஒருபோதும்கருதவில்லையென்பதை மனத்திலிருத்தல் வேண்டும்; அவர் மிக்க நல்லாரெனப் பெயரெடுக்கவே விரும்பியுழைத்தாரென்பதை அறிந்து நடத்தல் வேண்டும்; அவர் அவ்வாறே மிகப் பெரிய நல்லாரேனும் புகழ்படைத்தார்; அச்சிறந்த இலக்கணமே (நற்குணமே) உண்மையான உயர்வை அவருக்கு அளித்தது.

உயர்ந்த (உன்ன பதவிபெற்ற) மனிதராாக இருத்தற்கு எல்லாராலும் முடியாது; ஆனால் நல்லாராக இருத்தற்கு (முயற்சி செய்தால்) எல்லாராலும் முடியும்.

லயோலா கலெஜ்,
சென்னை,
31-7-1926.

எப். பேர்ட்ராம்,
எஸ். ஜெ.

பொருளடக்கம்

அதிகாரம்		பக்கம்
1.	முற்குறிப்பு	1
2.	காலைப்பொழுது	2
	(1) குழவிப்பருவம்	
	(2) குணாதிசயம்	
3.	கல்லூரிநாள்	4
4.	அரசாங்கவியல்	7
	(1) உத்தியோகம்	
	(2) கௌரவப்பட்டம்	
	(3) சருவகலாசாலைச் சம்பந்தம்	
5.	பொதுவியல்	13
	(1) அவர் இயற்றிய நூல்கள்	
	(2) ஊக்கமுடைமை	
	(3) ஒழுக்கமுடைமை	
	(4) அடக்கமுடைமை	
	(5) அருளுடைமை	
	(6) பொறையுடைமை	
6.	வாழ்க்கையியல்	18
	(1) வகுப்பு வாழ்க்கை	
	(2) சமய வாழ்க்கை	
7.	மாலைப்பொழுது	22
8.	புகழ்மாலை	24
	(1) சட்டசபைப் புகழ்மாலை	
	(2) பொதுஜனப் புகழ்மாலை	
9.	இல்லறவியல்	34
10.	அன்புமாலை	44

The Honourable Diwan Bahadur

L. D. SWAMIKANNU PILLAI

(M.A., B.L. LL.B., F.M.U., I.S.O., C.I.E.)

PRESIDENT

THE LEGISLATIVE COUNCIL, FORT ST. GEORGE, MADRAS

5—2—24.

கனம் திவான் பகதூர்

எல். டி. சுவாமிக்கண்ணு பிள்ளை,

(எம். ஏ., பி. எல்., எல் எல். பி., எப். எம். யூ., ஐ. எஸ். ஓ., ஸி. ஐ. இ.) அவர்களின்

ஜீவிய சரித்திரம்

"அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு".

அதிகாரம்—1

முற்குறிப்பு

உயர்ந்த கல்விப் புலமையும், சிறந்த ஒழுக்கமும், சீரும் சிறப்பும் ஒருங்கே வாய்க்கப்பெற்று, ஓர் இந்தியப் பெரியாரென இம்மையில் உலகம் புகழ வாழ்ந்து, இவ்வுலகைச் சின்னாட்களுக்கு முன் துறந்து மறுமைப் பேறெய்திய நந் தூய தண்டமிழ்த்தாயின் தவப் புதல்வராகிய திருவாளர் எல். டி. சுவாமிக்கண்ணு பிள்ளை யவர்களின் ஜீவிய சரித்திரத்தை ஒருவாறு சுருக்கமாகவாயினும் நந்தமிழ் மக்கட்கு அறிவித்தல் பெரிதும் நலம் பயப்பதாகும்.

கல்விச்செல்வம், பொருட்செல்வம், மக்கட்செல்வம் ஆகிய முச்செல்வங்களும் நிரம்பப்பெற்று வாழும் மனிதர் இவ் வுலகத்தில் மிகச் சிலரே யாவர். பெரும்பான்மையோரும் அரைகுறையான செல்வம் பெற்று, யாதாயினும்

ஒரு வகையில் துயரத்துடனும், துன்பத்துடனும் காலங் கழிப்பவர்களாகவே யிருப்பர்: ஒருவருக்கு ஒருவகைச் செல்வ மிருப்பின் பிறிதொரு வகைச் செல்வ மிராது; ஒருகால் மேற்கூறிய மூவகைச் செல்வமும் பொருந்தியிருப் பினும், உடற் சுகவாழ்க்கை யிராது; இந்நான்கும் பொருந்தி யிருப்பினும், நற்குணமும் நல்லொழுக்கமும் வாய்ந்த நல்லா ரெனப் பெயரெடுத்தல் அரிதினும் அரிது. ஆனால், நமது செந்தமிழ்த் தாயின் செல்வப் புதல்வர் அங்ஙனமிராது, மூவகைச் செல்வங்களும் பெற்றிருந்ததுடன், நல்ல தேக திடமும் நோயற்ற வாழ்வுமாகிய பெரும் பாக்கியமும் பெற் றிருந்தார். மேலும், இந்தியத் தாய் அரிதில் ஈன்ற சற் புத்திரர்களில் இவரும் ஒருவரெனவும், பேரறிஞரெனவும், ஆற்றல் மிக்காரெனவும், அன்புருவாளரெனவும் உலகம் புகழ வாழ்ந்தார்.

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே, நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே,—நல்லார்
குணங்க ளுரைப் பதுவும் நன்றே யவரோடு
இணங்கி யிருப்பதுவும் நன்று!"

ஆதலின், இந்த நல்லார்தம் சரிதம், நந்தமிழ்மக்கள் அனைவரும் அறிந்து குதூகலிக்கவும், பின்பற்றி நடக்கவும், ஒரு தூண்டுகோலாக விருக்குமென்பதில் ஐயமின்று.

அதிகாரம்—2

காலைப்பொழுது

குழவிப்பருவம்

பிள்ளையவர்கள், கோயம்புத்தூர் ஜில்லாவில் சோம னூர் என்னும் ஓர் சிற்றூரின்கண், ஒரு வேளாண் நற்

குடியில் கி. பி. 1864-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4-ந்தேதி அவதரித்தார். அவரது தாய் தந்தையர் முறையே சிலுவை முத்தம்மாள், ஏ. லூயிஸ் பிள்ளை யென்னுந் திருநாமமுடையார். பிள்ளையவர்களின் பெருமையை அறிந்தோர் யாவரும், அவர்தம் பெற்றோர்கள் நற்றவம் இயற்றிய நல்லாரென்றே இயம்புவர். அஃது என்னை யெனின், "மகன் றந்தைக் காற்று முதவி யிவன் றந்தை யென்னோற்றான்கொல் லெனுஞ்சொல்" என்னுந் தெய்வப் புலவரின் திருமொழியைப் பிள்ளையவர்கள் நன்கு விளங்கவைத்தார்கள்.

துணிசயம்

இதுநிற்க, அடக்கம், பொறுமை, அன்பு, இரக்கம் ஆகிய நற்குணங்களும் அவருடன் கூடவேபிறந்து வளர்ந்து வந்தன. கடுஞ்சொல் கனவிலுங்காணார். பிள்ளையவர்கள் தமது இளம்பிராயத்திலேயே குன்றா ஊக்கமும், குறைபடா ஒழுக்கமும், நிறைந்த அறிவும், தெய்வபக்தியுமுடையவராகத் திகழ்ந்தார்; "விளையும் பயிர் முளையில் தெரியும்" என்னும் பழமொழிக் கொப்பாக விளங்கினார். அவர் கல்வி கற்கத் தொடங்கிய காலத்தில் தஞ்சாவூர் ஜில்லாவைச்சேர்ந்த நாகப்பட்டணத்திலும், பிறகு திரிசிராப்பள்ளி நகரிலும் அமையப்பெற்றிருந்த "செயிண்ட் ஜோஸப் காலெஜ்" அல்லது "அர்ச். சூசையப்பர் கலாசாலை" என்னும் உயர்தர ஆங்கிலக் கல்லூரியில் கல்வி பயின்றார். இயற்கையில் திண்ணிய அறிவுடையாராதலின், ஆண்டுதோறும் தவறாமல் கல்விப் படித்தரங்களைக் கடந்து, மிகச் சுறுசுறுப்பாகக் கல்வித்துறையில் முன்னேற்றமடைந்து வந்தார். வயிரம்போன்ற வன்மையும், மின்சார ஒளி போன்ற தெளிந்த பிரகாசமும் பொருந்திய மூளையைப் பிள்ளையவர்கள் தமது பெற்றோர்தம் பண்டைத் தவப்

பயனால் பெற்றனர் போலும்; ஆதலின், நாடோறும் அறிவில் ஒருபடி மேனோக்கிச் சென்றுகொண்டிருந்தனரெனத் தெரிகிறது. சிறுவயதிலேயே பெரியோர் சொல்வதற்கு முன் அறிந்து நடந்து, "ஏவாமக்கள் மூவாமருந்து" என்னும் ஆன்றோர் வாக்குக்குப் பிள்ளை யவர்கள் இக்காலத்திய இலக்கியமாக இருந்தாரென்பது மிகையாகாது.

அதிகாரம்—3

கல்லூரிநாள்

அவர் பாடசாலையிற் படிக்கையில், தமது தினசரிப் பாடப் புத்தகங்களைச் சிறிது நேரமே ஒருவாறு வாசித்து வைத்துவிட்டு, மற்றைய நேரத்தில் புத்தகச் சாலைக்குச் சென்று, ஆங்குள்ள பல புத்தகங்களையும் படித்தவண்ணமிருப்பர்; எனினும், தம் வகுப்பில் எப்போதும் முதன்மை ஸ்தானத்தையே வகிப்பார். அதை ஒருபோதும் பிறருக்கு விட்டவரல்லர். இதைக் கண்ட உடன்மாணுக்கர்கள் பெரிதும் ஆச்சரியப்படுவார்கள். நான்காவது வகுப்பில் வாசிக்கையிலேயே, அவர் ஆங்கிலத்தில் கவிகட்டுந் திறன் அமைந்து விளங்கினார்.

ஒவ்வொரு பரீட்சையிலும் தவறாது தேறி, வருஷாந்தரப் பரிசளிப்பு விழாவில் ஒவ்வொரு பாடத்திலும் முதல் வெகுமதியைப் பெறுவர். அவர் அச்சமயங்களில் அவ்வாறு அடையப்பெறும் வெகுமதிகள் அவர் எடுக்க முடியாத தொகையினவாயும், பாரமுள்ளனவாயு மிருக்கும். அவர் பரிசுகள் பெறும்போது மற்ற மாணுக்கர்களும், ஏனையோரும் செய்யுங் கரகோஷங்களும், ஆர்ப்பரிப்புகளும் காது

செவிடு படுமாறும், கட்டிடம் எங்கே தளர்ச்சியுறுமோ என ஐயுறுமாறுமிருக்கும்! இத்தனைப் பரிசுகளாலும், ஆரவாரங்களாலும் நம் பிள்ளையவர்கள் ஓர் அணுவும் பெருமை கொள்ளாது, தம்மிருப்பிடஞ் சென்று அடக்கமா யமர்ந்து கொள்வர். இவ்வாறு ஒவ்வொரு வகுப்புப் பரீட்சையிலும் முதன்மை பெற்றுப் பரிசுகள் தவருமல் பெற்றதோடு, உயர்தரக் கலாசாலைப் பட்டப் பரீட்சைகளி லும் அவ்வாறே தேறுதலடைந்து சிறந்த பட்டமும் பரிசும் பெற்றனரென்ருல், அவர்தம் அறிவின் மாட்சி செப்புந் தரமாமோ!

பிள்ளையவர்கள், தமது 16-வது வயதிலேயே பி. ஏ. பரீட்சையில் தேர்ந்தார்; அக்காலத்திலேயே அவர் ஆங் கிலமொழி, லத்தீன்மொழி ஆகியவற்றில் வல்லுநராக இருந்ததுமன்றி, கணித நூலிலும் வேதாந்த நூலிலும் தேர்ச்சியடைந்திருந்தார். 17-வது வயதில் தாம் கல்வி கற்ற தாயகமாகிய உயர்தரக் கல்லூரியிலேயே ஓர் ஆசிரிய ராக அமர்ந்தார். தமது 19-ம் வயதில், எம். ஏ., பரீட் சைக்கு ஆங்கில மொழியையும் லத்தீன் மொழியையும் பாடமாகப்பயின்று, அப் பரீட்சையில் முதல் வகுப்பில் தேர்ச்சி யடைந்தனர். சென்னைச் சருவ கலாசாலையின் சரித்திரத்தில், முதன் முதல் எம். ஏ., பரீட்சையில் முதல் வகுப்பில் தேர்ச்சி யடைந்தவர் பிள்ளை யவர்களே யாவர். அதன் பிறகு கிரீக் பாஷை, பிரஞ்சு பாஷை ஜெர்மன் பாஷை ஆகியவற்றிலும் புலமை யெய்தப்பெற்ருர். இவையே யன்றி, ஆரியம் (சம்ஸ்கிருதம்), தமிழ், தெலுங்கு, மலையாளம் முதலிய நம்நாட்டு மொழிகளையுஞ் செவ்வனே கற்றுணர்ந்தார்.

அவர் பலபாஷா நிபுணராகத் திகழ்ந்தார். சுமார் 14 பாஷைகள் அவருக்குத் தெரியும். தமது சிறுபிராய முதல் இறுதிக்காலம் வரையில் தமது அறிவை மேன்மேலும் வளர்த்தலிலேயே பெரிதுங் கவனஞ் செலுத்திவந்தார்.

தமது 19-ம் வயதில் அவர் சென்னை நகருக்கு வந்து, அரசாங்க உயர்தரக் கலாசாலையாகிய "பிரசிடென்ஸி காலேஜில்" லத்தீன் பாஷை போதிக்கும் ஆசிரியராக அமர்ந்தார். பண்டைத் தண்டமிழ் நாட்டுப் பெரும்புலவர்கள் எவ்வாறு விளங்கினார்களோ அவ்வாறே இக் காலத்தில் பிள்ளை யவர்களும் ஒரு பெரும் புலவர் பெருமானாக விளங்கினார்.

மேலும், சென்னைச் சருவ கலாசாலையின் சட்டப் (பி. எல்.,) பரீட்சையிலும், லண்டன் சட்டப் பரீட்சையாகிய எல்எல். பி., பரிட்சையிலும் அவர் தேர்ச்சியடைந்தார். அவருடைய பல இலக்கியத் தெளிவையும், பல மொழி வல்லமையையும், குணாதிசயங்களையுங் கண்ட சென்னை அரசாங்க நிர்வாக உத்தியோகஸ்தராகிய (Sir Henry Stokes) சர் ஹென்ரி ஸ்டோக்ஸ் என்பார், பிள்ளையவர்களைப் பெரிதும் புகழ்ந்து நன்கு மதித்தார். லத்தீன் மொழி இலக்கியப் பேராசிரியர் "ஹொரேஸ்" என்பார் இயற்றிய நூலிலிருந்து சர் ஹென்ரி ஸ்டோக்ஸ் பிள்ளையவர்களை ஒரு கேள்வி கேட்டபோது, பிள்ளையவர்கள் அதற்குத் தக்க விடையளித்ததுமன்றி, விரிவாகவும் விடையளித்தனர். பிள்ளையவர்களின் இவ்விதமான அபார சக்தியைக் கண்டு, சர் ஹென்ரி ஸ்டோக்ஸ் பெரு மகிழ் வெய்தினர். இங்ஙனம் பிள்ளையவர்கள், சர் ஹென்ரி

ஸ்டோக்ஸின் நன்மதிப்பையும் அன்பையும் பெற்றிருந்தமை யானது, உடனே பிள்ளையவர்கள் ஓர் உயர் பதவி யடைதற்குத் தக்க சமயத்தில் துணை புரிந்தது.

அதிகாரம்—4

அரசாங்கவியல்

உத்தியோகம்

முதலில் சென்னை அரசாங்க நிர்வாக இலாகாவில் (செக்ரிடெரியட்டில்) பிள்ளை யவர்கட்குத் தக்க பதவி யொன்று கிடைத்தது. அதிலிருந்து, விரைவில் பிள்ளை யவர்கள் டிப்டி கலெக்டர் பதவிக்கு உயர்த்தப் பெற்றார். மீண்டும் உடனே சில மாதங்களுக்குள் சென்னை அரசாங்க நிர்வாக இலாகாவில் ஓர் உதவிகாரியதரிசிப் பதவிக்கு (அசிஸ்டேண்டு செக்ரிடேரியாக) உயர்த்தப் பெற்றார். அப் பதவியிலிருந்த பிறகு, சென்னை ரிவினியூ போர்டு ஆபீசில் முறையே உதவி காரியதரிசியாகவும், காரியதரிசியாகவும் 16 வருடம் அமர்ந்திருந்தார். அதன் பிறகு, கூட்டுறவு சங்க இலாகாவின் மாகாணத் தலைவராக (ரிஜிஸ்ட்டிரார் ஆப் கோவாப்பரேடிவ் சொசைடிட்டிஸ்) நியமனம் பெற்றார்.

அவர் காலத்தில்தான் கூட்டுறவு சங்க இலாகா பெரிதும் விருத்தி யடைந்தது; அதன் காரணமாக அரசாங்கத்தாரும் பொது ஜனங்களும் அவர்பால் பெரிதும் நன்மதிப்பெய்தினர்; சுமார் 7 ஆண்டுகள் வரையில் அவ்விலாகா தலைவராக அமர்ந்திருந்தார். அரசாங்கத்தார் வேண்டுகோளுக்கிணங்கிக் கூட்டுறவு இயக்கத்தின் சரித்திரப்

புத்தக மொன்றும் அவர் இயற்றினர். பிறகு நெல்லூர் ஜில்லாக் கலெக்டராக நியமிக்கப்பெற்றார். பின்னர், சென்னை விவசாய இலாகா மாகாணத் தலைவராக (டைரெக்டர் ஆப் அக்ரிகல்ச்சர்) நியமனம் பெற்றார். அதன் பின்னர், சிறிது காலம் அரசாங்கக் காரியதரிசியாக இருந்து, மாண்டேகு செம்ஸ்போர்டு இந்திய அரசாங்கத் திருத்தச் சட்டம் எழுதிய காலத்தில், அதற்கான விதிகளை (ரூல்ஸ்) அவர் நுணுகி ஆராய்ந்து வரைந்து அரசாங்கத்தாருக்கு உதவினார்.

இவ்வாறு 32 வருஷங்கள் அரசாங்கத்தில் மிக்க உயர்ந்தனவும், பெரும் பொறுப்புள்ளனவுமான பல நிர்வாகப் பதவிகளில் அவர் வீற்றிருந்து, மிகத் திறமையாகவும் உண்மையாகவும் பொதுநல சேவை செய்து, உபகாரச் சம்பளம் பெற்று ஓய்வு பெற்றார். ஆனால், உடனே அவருக்கு அரசாங்கச் சம்பந்தம் மீண்டும் உண்டாய்விட்டது: மாண்டேகு செம்ஸ்போர்டு சட்டப்படி ஏற்பட்ட சட்டசபையில் முதன் முதல் காரியதரிசிப் பதவியில் அமரும் பெரும்பேற்றைப் பிள்ளையவர்கள் 1920-ம் ஆண்டில் பெற்றார். புதிய சட்டப்படி அமையப்பெற்ற சட்டசபையில் முதல் காரியதரிசிப் பதவியைப் பிள்ளை யவர்கட்கு அரசாங்கத்தார் அளித்தது, அவர்தம் அறிவின் மாட்சிக்கு ஒரு சிறிய நன்கொடை போலாம்!

இங்கிலாந்தில் லண்டன் நகரத்தில் ஆங்கிலப் பார்ளுமன்றத்தின் நடைமுறையை யறிந்துகொண்டு வருதற்காக, பிள்ளை யவர்களை அரசாங்கத்தாரே தங்கள் செலவில் இங்கிலாந்துக்கு அனுப்பினார்கள். அதற்கு முன்னரும் ஒருகால் பிள்ளையவர்கள் தாமாக இங்கிலாந்துக்கும், பிரான்சு, இத்தாலி முதலிய ஏனைய சில ஐரோப்பிய நாடுகளுக்குஞ்

சென்று, அவ்வந்நாட்டு அரசியல் விவகாரங்களேயும், நிலே மையையும் உணர்ந்துகொண்டிருந்தார்.

அவர் முதன்முறை ஐரோப்பாவுக்குப்போக எண்ணிய முக்கிய கருத்துக்களில் ஒன்று, இத்தாலியாவின் தலேநகரமாய் விளங்கும் "நித்திய நகரம்" என வழங்கும் உரோமாபுரியின்கண் வீற்றிராநின்ற சத்திய திருச்சபையின் பிரத்தியட்சத்தலேவராகிய அர்ச். பாப்பானவரைத் தரிசித்தலாகும். அவ்வாறே அவர் ஆங்குச் சென்று, பரிசுத்த பாப்பானவர்களின் பாதபங்கயங்களேச் சேவித்து, அவர்தம் அழகிய தெய்வீக வடிவைக் கண்ணாரக் கண்டு, அவர் திருவாயினின்றுசொரியும் அமுதவாக்குகளேச் செவிபாரவுண்டு களித்துப் புளகாங்கிதமானார்.

அவர், அதுகாலே ஐரோப்பாவிலிருந்தே எழுதிவிடுத்த திருமுகங்களிலும், இந்தியாவிற்குத் திரும்பியபின் நிகழ்த்தின சொற்பொழிவுகளிலும், அவரிடத்தில் இயற்கையாகவே பொருந்தியிருந்த தேவபக்தியும், திருச்சபைத் தலேமைத் தானத்தின்பால் கொண்டுள்ள சிரவணமும் பட்சமும் பரிவும் ததும்பிநின்றன.

அரசாங்கத்தார், 1923-ம் ஆண்டு (சர். பி. ராஜகோபாலாசாரியாருக்குப்பின்) புதிய சட்டசபைத் தலேவராகப் பிள்ளேயவர்களே நியமித்தனர். அஃதன்றியும், 1925-ம் ஆண்டு புதிய சட்டசபை அங்கத்தினர்கள், தங்கள் வாக்குரிமைச் சீட்டு வாயிலான், தங்கள் தலேவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றபோது, அங்கத்தினர் பெரும்பாலோரும் பிள்ளேயவர்களின் திறமையையுந் தகுதியையும் பாராட்டி, தங்கள் வாக்குரிமையை யளித்துப் பிள்ளேயவர்களேயே தங்கள் முதல் தலேவராகத் தேர்ந்தெடுத்தனர்.

இதுவும் பிள்ளையவர்களின் மேன்மையை யறிவிக்கும் இயற்கைக் கடவுளின் பேரன்பாகும்!

மிண்டோமார்லி அரசியல் சீர்திருத்தச் சட்டத்தால் அமையப் பெற்றிருந்த பழைய சட்டசபையிலும் பிள்ளையவர்கள் ஓர் அங்கத்தினராக வீற்றிருந்தனர். புதிய சட்டசபையின் நடை முறையை ஒழுங்காக நடைபெறச் செய்வதற்கு, பிள்ளையவர்கள் பலவாற்றானும் தகுதியுடையவராக விளங்கினார். சட்டசபை அங்கத்தினர்களுக்குள், பிள்ளையவர்களின் அருங்குணங்களையும் பெருந்திறனையும் புகழ்ந்து மதியாதார் ஒருவருமிலர். கல்வி யறிஞர்களும், செல்வச்சீமான்களும், பல கட்சிப்பிரிவினர்களும் வீற்றிருக்குஞ் சட்டசபையை, எல்லோரும் திருப்தியடையுமாறு அமைதியாக நடாத்துதல் எளிதன்று. நமது பிள்ளையவர்கள், நடுநிலை நீங்காமல் சட்டசபை நிகழ்ச்சியை மிகத் திறமையாக நடத்தி வந்தார். ஆதலின், சட்டசபையினர் எல்லாருடைய நன்மதிப்பையும் பெற்றனர்.

கௌரவப்பட்டம்

அரிய பண்டிதராகிய சுவாமிக்கண்ணு பிள்ளை யவர்களது பேரறிவுக்கும், காரிய நிர்வாகத் திறனுக்கும், ராஜாங்க உண்மைச் சேவைக்கும் சன்மானமாக அரசாங்கத்தார் மிகப் பெரிய கௌரவங்களும் பட்டங்களும் அளிக்கலாமாயினும், அவருக்குச் சில கௌரவப் பட்டங்களே அளித்தனர். ஏன்? அவர் வீண் பெருமைக்கும் கௌரவத்துக்கும் ஆசைப்பட்டுத் தாமாகப் பெரு முயற்சி செய்தவரல்லர்; அரும் பெரும் முயற்சி செய்து பட்டம் பெறுபவரும் சிலர் உளரன்றோ? ஆனால், நம் பிள்ளையவர்கள் அவ்வாறு அணுவளவும் ஆசைப்பட்டவரல்லர்; அவைகட்காக

எவரிடத்தும் கேட்டவருமல்லர்; வேறு அடையாளங்களால் குறிப்பித்தவருமல்லர். இத்தகைய கௌரவப்பட்டங்களைப் பற்றிப் பிறர் அவரிடத்தில் வற்புறுத்திப் பேசிய போது அவர் அன்னாருக்கு அளித்த மறுமொழி யாதெனின்: "யாதாவதொரு கௌரவத்துக்கு நான் பாத்திரனாக இருந்தால் அதுதானே வரட்டும். கௌரவங்களை வலிய வருவிக்க நான் உடன்படேன்" என்பதேயாம்.

அவர் பெற்ற கௌரவப்பட்டங்கள் பின்வருவன:

1909-ம் ஆண்டில் அவர் ரிவினியூபோர்டில் காரியதரிசியாக இருந்தபோது அரசாங்கத்தார் அவருக்குத் திவான்பகதூர் என்னும் கௌரவப்பட்டம் வழங்கினர். அதன் பிறகு, கூட்டுறவு சங்க இலாகாத் தலைவராக இருந்தபோது, ஐ. எஸ். ஓ., என்னும் பட்டமும், சட்டசபைக் காரியதரிசியாக இருந்தபோது, ஸி. ஐ. இ., என்னும் பட்டமும் அளித்தனர்.

சருவகலாசாலைச் சம்பந்தம்

பிள்ளையவர்கள் பன்மொழியும் பல நூலும் கசடறப் பயின்று, நிரம்பிய கல்விப்புலமை எய்தப்பெற்று,

> "கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக"—

என்னும் பொய்யாமொழிப் புலவர் திருவாக்குக்கு இலக்கணமாக மிளிர்ந்தாராதலின், கலை பல கற்றுத் தேர்ந்த நிபுணராகிய பிள்ளையவர்களை, அரசாங்கத்தார் சென்னைச் சருவ கலாசாலையில் ஓர் உறுப்பினராகப் பல ஆண்டுகட்கு முன்னரே நியமித்தனர்.

சுமார் 25 ஆண்டுகள் வரையில் பிள்ளையவர்கள் சருவ கலாசாலையில் அவ்வகைப் பதவியை இடையருது, தமது இறுதிக் காலம்வரையில் வகித்திருந்ததுமன்றி, சருவ கலா சாலையின் பலவகை உயர்ந்த பரீட்சைகளின் கௌரவ ஆசிரியத் (Examiner) தன்மையையும் அடைந்திருந்தார்.

1913ஆண்டில் சென்னைச் சருவ கலாசாலையின் வருஷாந்தரப் பட்டமளிப்புவிழாவின்போது பட்டதாரிகளுக்கு வழக்கமாகப் புகட்டும் நற்புத்திச் சொற்பெருக்கொன்று செய்யும்படி சருவகலாசாலைத் தலைவர் (Chancellor) சென்னைத்தேசாதிபதி (Governor) பிள்ளையவர்களைக் கேட்டுக்கொண்டனர்; அதற்கிணங்கி அவர் அக்காலை மிக்க அருமையானதும் அறிவு செறிந்ததுமான ஓர் சொற் பொழிவு செய்தனர்.

அதில் மாணவர், படிப்பை முடித்து, பட்டங்கள் பெற்று, பாருலகில் தத்தம் வாழ்க்கை நலத்திற்கான தொழில்களைத் தேடிச் செல்லுகையில் தாமாகப் படித் துணர்ந்து, அறிவை விருத்தி செய்துகொள்ளவேண்டிய மார்க்கங்கள், நன்னடக்கைக்கான முறைகள், சாத்திர ஆராய்ச்சி, சாசன ஆராய்ச்சி, மொழிவளர்ச்சி முதலியன செய்து காரியசித்தி பெறுவதற்கான வழி ஆகியவைகளைப் பற்றிய அரிய போதனைகள் செறிந்து கிடக்கின்றன. அவ் வுபந்நியாசத்தை அருகிலிருந்து காதாரக்கேட்டுக் களிப்புற்ற மேன்மை தங்கிய சென்னைத் தேசாதிபதி யவர்கள் அன்று மாலை தம் இல்லஞ்சென்றவுடனே பிள்ளையவர்களின் உபந் நியாசத்தைப் பெரிதும் புகழ்ந்து, தம் கைப்பட ஒரு கடித மெழுதியனுப்பிப் பிள்ளையவர்களை மிகவும் உபசரித்தனர்.

அதிகாரம்—5

பொதுவியல்

அவர் இயற்றிய நூல்கள்

இவ்வாறு தமக்கு ஏற்பட்ட மிகப் பெரிய உத்தியோகப் பொறுப்புக்களுக்கும் பொதுஜன சேவைகளுக்குமிடையில் பிள்ளையவர்கள் புதிய நூல்களியற்றியது பெரிதும் பாராட்டற்பாலது. மிகக் கஷ்டப்பட்டு ஆராய்ந்தறிந்து தாமாக அநேக புதிய நூல்கள் இயற்றினர். ஞாபக ரகசியம் (Secret of Memory), இங்கிலாந்து தேச சரித்திரம், சுருக்கெழுத்துப் (Shorthand) புத்தகம், இந்தியக் காலக்கணிதம் (Indian Chronology), இந்தியப் பஞ்சாங்கம் (Indian Ephemeris) என்னும் அரிய பெரிய நூல்களை இயற்றியுள்ளார். இந்த "இந்தியப் பஞ்சாங்கம்" என்னும் விழுமிய நூலில் கி. மு. 700-ம் ஆண்டு முதல் கி. மு. 2000-ம் ஆண்டு வரையில் இந்திய நாள், நட்சத்திரம், திதி முதலிய காலக்குறிப்புக்கள் அனைத்தும் மிகத் தெளிவாகவான சாஸ்திர முறைப்படி கணிக்கப்பட்டிருக்கின்றன. இந்நூல் 7 தொகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது. இதனை இந்து கணிதசாஸ்திர மேதாவிகளேயன்றிப் பல ஐரோப்பிய வான சாஸ்திரிகளும், ஆசிரியரும் பெரிதும் போற்றிப் புகழ்வாராயினர்.

தமக்குள்ள மிகப்பெரிய உத்தியோக வேலைகளையும் திறமையாக நடாத்திக்கொண்டு, தமது கணித அறிவை மிக நுணுகி இடையறாது ஆராய்ச்சி செய்து, இப்பெரிய கணித நூல்களை வெளியிட்ட பிள்ளையவர்களின் வல்லமையும், அறிவின் மாட்சியும் கல்வியறிஞர் பலரானும் அரசாங்கத்தா

ரானும் மெச்சப்பட்டன. பிள்ளையவர்கள் தமது அறிவுக் களஞ்சியத்தைத் திறந்துவிட்டு உலகத்தாருக்கு இந் நூல்களின் வழியாய் உபகரித்தார் போலும்!

ஊக்கமுடைமை

"ஊக்க முடைமை ஆக்கத்திற்கழகு,"

ஆதலின், பிள்ளையவர்கள் தமது பிள்ளைப்பருவந் தொடங்கித் தமது முதுமைப் பருவம் வரையில், கல்வி, தொழில், இல்லறக் கடன் முதலியவற்றில் ஓர் உறுதியாகக் கைக்கொண்ட பேரூக்கமுடைமையானது, அவரது பேராக்கத்திற்கும் பெருமைக்கும் அழகு செய்து பேராணாக இருந்தது.

ஆகவே "ஓதுவது ஒழியேல்" என்னும் நந்தண்டமிழ் மூதாட்டியின் நன்மொழியைப் பேரூக்கத்துடன் பிள்ளையவர்கள் தமது இறுதிக்காலம் வரையில் கடைப்பிடித்து ஒழுகினர்.

பொதுவாக எப்போதும் இரவில் 11 அல்லது 12-மணிக்குத்தான் படுக்கைக்குப் போவார்; காலை 5-மணி முதல் இரவு 11-மணி வரையில், உத்தியோகக் காகிதக் கட்டுக்கள் எண்ணிறந்தன ஒருபுறம் அடுக்கிக்கிடக்கும் போதும், புத்தகமும் கையுமாகத்தானிருப்பர். எழுதுகோலும் (பேனாவும்) காகிதமும் அவருக்கு இனிய விளையாட்டுக் கருவிகளாகும்.

இவையேயன்றி, தமது பிள்ளைகளுக்கும் வீட்டில் ஒரு பேராசிரியராக அமர்ந்து, அரிய பெரிய பல பாஷைகளையும், இலக்கண இலக்கியங்களையுங் கற்றுக் கொடுத்துவந்தார்.

இவ்வகையான ஊக்கமுடைமை மக்கட்பிறப்பினர் யாவருக்கும் இன்றியமையாது வேண்டப்படுவதாகும்.

ஒழுக்கமுடைமை

“ ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்”.

ஐம்பெரும் பூதங்களைப் போன்று என்றும் உண்மையும் நன்மையும் நிலைத்தலுமுடைய பொய்யாமொழிப் புலவரின் பொன் மொழியைத்தேர்ந்து தெளிந்தவராதலின், பிள்ளையவர்கள் தமது சிறுபிராயந் தொடங்கித் தமது இறுதிக்காலம் வரையில், எந்நிலைமையிலும் எச்சந்தர்ப்பத்திலும் தீமொழி பகர்ந்ததேயில்லை.

மற்றும், அநாவசியமான வெளி வேடிக்கை, ஆட்டம், பாட்டம், கூட்டம் முதலிய சில்லரை நிகழ்ச்சிகளுக்கு அவர் செல்வதில்லை. நாடோறும் கடவுள் பக்தியுடன் தமது தினசரி இல்லறக் கடனைச்செவ்வனே முடித்து, ஏழைகள்பால் இரக்கங்காட்டி, ஏனைய உயரிய உத்தியோகஸ்தர்களைப் போலில்லாமல், எவ்வகை ஆடம்பரமுமின்றி, இல்லற ஞானியாக இவ்விரும்புவிதன்னில் வாழ்ந்தார் :

“ உண்டுடுத்து பூண்டிங் குலகத்தார் போற்றிரியும்
தொண்டர்விளை யாட்டே சுகங்காண் பராபரமே”.

அடக்கமுடைமை

“ அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்”.

என்னும் நாயனார் திருமொழியைக் கடைப்பிடித்து, அடக்கமாகவும், மிகப் பெருமையாகவும், சுற்றம் ஓம்பி, ஏழைகளை ஆதரித்து, தமது இல்லறக்கடனை இனிது நடாத்தினார்.

தமக்கு மேலாகவுள்ள அதிகாரிகள்பால் அன்பாகவும் மரியாதையாகவும் அடக்கமாகவும் நடந்துகொள்ளுவார்;

தமக்குச் சமமாக இருப்பவர்களிடத்தில் அன்பும் நட்பும் உடையார்; தமக்குத் தாழ்ந்திருப்பவர்கள்பால் இனியமொழி கூறி, இரக்கங்காட்டி, அவர்கட்கு வேண்டும் உதவிபுரிவார்; அவர்தம் பேருதவியால் முன்னுக்குவந்த அதிகாரிகள் அனந்தம்பேர். எக்காரணத்தை முன்னிட்டும் ஒருவருடைய மனம் நோவப் பேசார். தமது மனச்சாட்சிக்கு விரோதமாக எக்காரியமுஞ் செய்யார்.

அருளுடைமை

" அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த
இன்னா வுலகம் புகல் "

அருள் சேர்ந்த நெஞ்சினராகிய அவர்தம் பேருதவியால் முன்னுக்கு வந்தவர்கள் அனந்தம் என்றோம். இஃது உண்மையாயினும், அரசாங்கக் காரியாலயங்களில், இந்திய கிருஸ்துவர்கள் உத்தியோகங்களைப் பெறுதற்குப் பிள்ளையவர்கள் போதிய அளவு துணை புரியவில்லையென அவலமாகக் குறை கூறுபவர்களும் இல்லாமற் போகவில்லை. இக்கூற்று சற்றும் உரை காணாது.

இந்தியக் கிருஸ்துவர்களுக்குள் தலை சிறந்து விளங்கிய அவரை அறியாதார் இத் தென்னிந்தியாவில் வெகு சிலரேயாவர். ஆகவே, அவர் உதவியை நாடி வருபவர்களுக்குக் கணக்கில்லை. இவ்வாறு வருபவர்களெல்லோருக்கும் அவர் எங்ஙனம் உதவிபுரிதல் கூடும்? அப்படி வருவோர் அனைவருக்கும் அவர் உத்தியோகஞ் செய்வித்தல் கூடுமெனவே வைத்துக்கொண்டாலும், அன்னார் ஒவ்வொருவருடைய உண்மை யோக்கியதையையும், திறமையையும் அவர் எவ்வாறு அறிதல் கூடும்? தகுதியை யறியக்கூடாத நிலைமையில் அவர் எங்ஙனந் துணிந்து சிபாரிசு செய்வர்?

உள்ளபடியே தம்முடைய உதவிக்குப் பாத்திரர் எனத் தாம் தெரிந்துகொண்ட யாவர்க்கும் அவர் தம்மாலான சகாயம் செய்யாமற் போகவேயில்லை யெனத் திண்ணமாகச் சொல்ல லாம். அவரோடு நெருங்கிப் பழகும் பாக்கியம் பெற்ற எவர்க்கும் இவ்வுண்மை உள்ளங்கை நெல்லிக்கனி யெனத் தெள்ளிதில் புலனுகும்.

பொறையுடைமை

"துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வா
யின்னுச்சொ னோற்கிற் பவர்".

அவருக்கு அனைவரும் மித்திரர்களே யன்றி, சத்துருக் கள் ஒருவரேனுமிலரென்றே சொல்லலாம். ஏனெனில், அவர் எவர்க்குந் தீங்கு சிறிதும் செய்தறியார். "கீழோ ராயினுந் தாழவுரை" என்னும் முதுமொழி அவரிடம் அடைக்கலம் புகுந்ததுபோலும்! எல்லோரிடத்தும் இன் சொற் பகர்ந்து சாந்தமாக உரையாடுவர்; கடுஞ்சொல் ஒருபோதும் பேசார். அவர் சினந்து பேசி எவருங் கண்டதுமில்லைக் கேட்டதுமில்லை. அவர்தம் மக்களில் யாராவது தவருக நடப்பதைக்கண்டு அவர் அவர்களைக் கண் டிக்க நேரிட்ட விடத்தும், "என்ன மதி யிது? இந்தப்புத்தி உனக்குப் போதித்ததார்?" எனச் சிறிது அழுத்திச் சொல்லுவாரேயன்றி, அவரது வாயினின்று தகாத வார்த் தை எதுவும் வெளிப்பட்டதே கிடையாது. ஒருகால், அவர் பொதுநலங்கருதிச் செய்த ஒரு காரியத்தின் தன்மையைப் பற்றி, குறுகிய நோக்குடையார் சிலர் அவரைக் குறை கூறி, அவமதித்துப் பேசியதைக்கேட்ட ஒருவர் அதை அவரிடம் அறிவிக்க, அவர் "அப்படியா" எனச்சொல்லிப் புன்னகை புரிந்தாரேயன்றிச் சிறிதுங் கோபங்கொள்ளவில்லை. இதைக்

கண்ட அக்கனவான், "இத்தகைய பெருந்தன்மை படைத்த பெரியாரிடத்தில் நாம் இதை யேன் சொன்னோம்" எனத் தம்மைத்தாமே நிந்தித்துக்கொண்டு, சென்றார்; பின்னொருகாலும் அத்தகைய விஷயங்களைப் பிள்ளையவர்கட்கு அறிவிக்க அவர் துணிந்தாரில்லை.

அதிகாரம்—6

வாழ்க்கையியல்

வகுப்பு வாழ்க்கை

பிள்ளையவர்கள் கிருஸ்துவப் பொதுஜன நன்மைக்கான எந்த முயற்சியிலும் ஈடுபட்டு, பொறுப்புடன் பெரும் பாரந்தாங்கி இடையறாது உழைப்பர். அவர் சேர்ந்து உழையாததும், அவரது ஒப்பற்ற உதவியை, உன்னத யோசனையை, அல்லது நடுநாயகத்தை நாடிப் பெறாததுமான பொது நலக்கழகம் நாட்டில் ஒன்றுமேயில்லை. அவர் சமுகந் தராத கூட்டம் எதுவும் சோபியாது; அவர் சபா நாயகராகவோ, சாதாரண ஓர் அங்கத்தினராகவோ பிரசன்னமாயுள்ள கூட்டங்களில், யாதாவதொரு சிக்கலான கேள்வி பிறந்து, பலத்த வாதம் நிகழுங்கால், நம் பிள்ளையவர்கள் யாவற்றையும் சாவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்து, கடைசியில் எழுந்து தேனொழுகும் தமது மதுரவாக்கினால் யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்க நியாயங்களைச் சாதுரியமா யெடுத்துரைத்து, வாதங்களுக்கு ஒரு நல்ல முடிவு காட்டிவிடுவர். எல்லோரும் அம்முடிவை அங்கீகரித்ததற்கு அடையாளமாகக் கரகோஷஞ் செய்து களிப்புறுவர்.

தென்னிந்தியாவிலுள்ள கத்தோலிக்கு இந்தியரின் இலௌகிகப் பொது நன்மைக்கென சென்னையில் நிறுவப் பெற்ற "தென்னிந்தியாக் கத்தோலிக்கு இந்தியர் சங்கம்" என்னும் ஒரு மகா சங்கமானது, ஆதிதொட்டு அவரது ஆதரவையும் அதிநுட்ப ஆலோசனையையும் அரிய அநுபவத்தையும், உண்மை யுழைப்பையுங்கொண்டு, நடைபெற்று வந்துளது. அவரது முகாமை பெற்ற அச்சங்கம், கோரிய அளவு அபிவிருத்தியடைந்து, பொதுஜன சமூகத்துக்குப் போதிய நன்மை செய்யவில்லையென்பது ஒரு சாரார் அபிப்பிராயம்.

ஆயினும், ஒரு ஜன சமூகத்துக்காக நிறுவப்பெற்ற ஒரு சங்கத்தால், அச்சமூகத்தார் அல்லது சங்கத்தார் அனைவரும் ஒருமித்து ஒத்து உழைத்தாலன்றிப் பெரு நன்மை யொன்றும் சாதித்தல் கூடாதென்பது அறிஞரெவரும் ஒப்புக்கொள்ளக் கூடிய உண்மையாகும். ஆகவே, தென்னிந்தியாக் கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தை அந்த ஜன சமூகத்தார் போதிய அளவு ஆதரிக்கவில்லையானதால் அது அதிக நன்மை சாதிக்க முடியவில்லை யெனக்கூறலாமே தவிர, அக்குறையைப் பிள்ளையவர்கள் மீது ஏற்றுதல் சற்றும் நியாயமற்றதாகும். கத்தோலிக்கு இந்தியர்களுக்குள் எழுந்த பல பொதுக்கழகங்களில் எதுவும் ஈடேறாது இடை யறுந்து வீழ்ந்து போயிருக்க, தென்னிந்தியாக் கத்தோலிக்கு இந்தியர் சங்கமொன்றே சென்ற 25 வருஷ காலமாக, இதுகாறும் நிலைத்திருந்தமைக்குக் காரணகர்த்தர் பிள்ளையவர்களே யென்பது ஒரு சிறிதும் மிகையாகாது. அவர் மீகாமனாகநின்று அதை நடத்தாது போயிருப்பாரேயானால், அச்சங்கம் நெடுநாட்களுக்கு முன்னரே பார் தாக்கிப் பக்குவிட்டிருக்கும்.

சமய வாழ்க்கை

"கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவ
னற்ரு டொழாஅ ரெனின்"

என்னுந் திருமொழியைக் கற்றுணர்ந்தவ ராதலின்,

அவரது கிருஸ்துவ சீவியம் ஏனையகிருஸ்துவருக்கு ஒரு மேல்வரிச்சட்டம் போன்றிருந்தது. அவர் தினந்தோறும் திவ்விய பூசை காணுதிரார். அடிக்கடி திவ்விய சற்பிரசாத பந்தியிலமர்ந்து தமது ஆண்டவரை அன்புடன் உட்கொண்டு, ஆனந்த வாரியில் ஆழ்ந்து களிப்பர். அவர் திவ்விய நற்கருணைச் சந்நிதானத்திலிருந்து செய்யும் பக்தியும், பரிவும், சிரவணமும், தாழ்ச்சியும், தேவசேவையில் காட்டும் ஊக்கமும் உற்சாகமும் எவர் மனத்தையுங் கவர்ந்து, அவரைப் பின்பற்றி நடக்க அவர்களைத் தூண்டும்.

திவ்விய இரட்சகரின் திருப்பாடுகளைத் தியானிப்பதில் அவருக்கு அதிகப் பிரியமுண்டு. காலையில் திருப்பலிப் பூசைக்குச் சென்றவர்கள் பூசையைக் கண்டதும் தத்தம் அலுவலை நோக்கி வெளியே செல்லுகையில், பிள்ளையவர்கள் மாத்திரம் கோவிலிலே தங்கியிருந்து தனித்துப் பக்தி யுருக்கத்துடன் செபித்துக்கொண்டிருப்பர்.

ஒரு நாட் காலை, அவரது அன்பர்களில் ஒருவர் அவரைக் கண்டுபேச அவரது இல்லத்துக்குச் சென்ருர். அவர் அங்கில்லை யெனவும், ஆலயத்துக்குச் சென்றுள்ளாரெனவும் தெரிந்து, கோவிலுக்குப் போனுர். அவர் அங்குச் சென்றபோது, பிள்ளையவர்கள் மிகப் பக்தியுடன் பூசை கண்டு பக்திசெய்து கொண்டிருப்பதைப் பார்த்தார். பூசை முடிந்தவுடன் அவரைக் காணலாமெனக் கருதி அங்கேயே காத்திருந்தார். பூசை முடிந்ததும் ஜனங்கள்

அனைவரும் வெளியே வர, பிள்ளையவர்கள் மாத்திரம் நெடு நேரம் வரையில் வெளிப்படவில்லை. அந்நண்பர் வாயிற் படியண்டை நின்று எட்டிப்பார்த்தபோது, பிள்ளையவர்கள் பக்தியுடன் செபித்துக் கொண்டிருப்பதைக் கண்டு பேராச்சரியமுற்றார்.

பொருளுடைமை எய்தப்பெற்ற மானுடர்கள் ஈசுவர பக்தியில் ஈடுபட்டிருப்பது அரிது. இதுபற்றி யன்றோ, கிருஸ்து நாதர், " ஒரு ஐசுவரியவான் சர்வேசுவரனுடைய இராச்சியத்தில் பிரவேசிப்பதைவிட ஓர் ஒட்டகம் ஓர் ஊசியின் காதில் நுழைந்து போவது எளிதாம்" எனத் திருவாய் மலர்ந்தருளினர். அங்ஙனமிருக்க, பிள்ளையவர்கள் கல்வியுடைமை பொருளுடைமை ஆகிய இருபேறுகளையும் பெற்று, தமது பெருமை, பல வேலை, கவலை, உத்தரவாதம் முதலிய யாவற்றையும் முற்றும் மறந்தவராய் மேற்சொன்ன வாறு, தேவனைத் தியானிப்பதில் மிகத் திருப்தி கொள்வாரானல், அவர்தம் செயல் பெரிதும் மெச்சத்தக்கதன்றோ?

பிள்ளையவர்கள் தமது கல்விக்குத் தாயகமாகிய திரிசிராப்பள்ளி அர்ச். சூசையப்பர் கலாசாலையில் நடைபெறும் ஞான ஒடுக்கத்துக்கு ஆண்டுதோறும் சென்று, ஆத்தும சுத்திசெய்து, ஞான ஆறுதலும், பலமும், உற்சாக முங்கொண்டு திரும்புவார். இவ்வாறு நடைபெறும் பொது ஞான ஒடுக்கங்கட்குப் போக வியலாது போனல், ஓரோர் சமயங்களில் இதற்கென ஓய்வுபெற்று, திரிசிராய்பள்ளிக் கேகி, ஆங்கு ஒரு குருவானவரைத் தெரிந்து, அவரது ஞானோபதேசம் பெற்று மூன்று அல்லது அதிக நாட்களுக்கு உலக விவகாரங்களினின்றும் ஒதுங்கியிருந்து தனி ஒடுக்கம் அநுசரிப்பார்.

ஆதலின், இத்தகைய பண்புள்ள அப்பெரியாரை அறிவுக் களஞ்சியம், அன்புக் களஞ்சியம், பொறுமைக் களஞ்சியம், பக்திக் களஞ்சியம் எனக் கூறுதல் சாலவும் பொருந்தும்.

அதிகாரம்—7

மாலைப்பொழுது

இந் நீர்மைத்தாய பெரியார், தமது 61-ம் ஆண்டில் இரண்டொரு நாள் சிறிது நோயுற்றிருந்து, சுவாச காச நோயால் 1925-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10-ந் தேதி வியாழக்கிழமை இரவு இவ்வுலகைவிட்டுப் பிரிந்து, எல்லாம் வல்ல இறைவன் கட்டளைப்படி மறுமைப் பேறெய்தினார். அங்ஙனம் அப்பெரியார் மறுமைக்கேகினது, இன்னும் மேன்மை மிக்க பதவியில் வீற்றிருந்து, ஆன்மாக்களுக்கு உதவிபுரியச் சென்றாரென்று கருதுதற்குப் பெரிதும் பொருத்தமாக விருக்கிறது! அவரது ஜீவிய சரித்திரத்தை ஆய்ந்துணருவோருக்கு இஃது இனிது புலனாகலாம்.

அவர் மரணமடைந்த பிறகு, அவரது திருமேனி அலங்கரிக்கப்பெற்று, அவர்தம் அழகிய திருமாளிகையில் ஒரு நாள் முற்றிலும் வைக்கப்பெற்றிருந்தது. அதுகாலை, உற்றாரும், நண்பர்களும், உயர்ந்த அரசாங்க அதிகாரிகளும் ஏனையோருமாக எண்ணிறந்தோர் கூட்டங் கூட்டமாகச் சென்று பார்த்துத் தத்தம் மெய் அன்பையும் அநுதாபத்தையுந்தெரிவித்து, அவர்தம் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறிப் போந்தனர்.

11-ந்தேதி வெள்ளிக்கிழமை மாலை அவர்தம் திருமேனியை, விழாக்கோலத்துடன் அரசாங்கப் பொலீஸ்ப்

படை புடைசூழ்ந்து மரியாதை புரிந்து வரவும், அரசாங்க அதிகாரிகள் எத்திறத்தினரும் ஏனையோரும் பின் ருெடர்ந்து செல்லவும், சென்னை நகரின் வட கோடியாகிய இராயபுரத்திலிருந்து, சென்னை நகரின் தென் கோடிப் பகுதியொன்றின் கண்ணுள்ள (அரசாங்கப் பொது மருத்துவச் சாலைக்கருகில்—General Hospital) அர்ச். வியாகுல மாதா கல்லறைத்தோட்டத்துக்கு எடுத்துச் சென்றனர். அப்பெருங் கூட்டத்தில் அவரைப் புகழாத நாவும், அவர் திருமேனியைக் கண்டு அன்பு நீர் சொரியாத கண்களும் இல்லவே இல்லை.

கல்லறைக்குச் சென்றவுடன் திருவாளர் பேராசிரியர் அற்புதசாமி உடையார், பி. ஏ., யல். டி., நம் பிள்ளையவர்களின் ஜீவிய சரித்திரத்தை மிகத் தெளிவாகவும், உருக்கமாகவும், அன்பெனும் ஆறு கரையது புரள நீண்டதோர் சொற்பெருக்கு வாயிலான் எடுத்தியம்பினர். பின்னர், முதன் மந்திரி பனகால் ராஜா, நியாயாதிபதி (ஜட்ஜ்) தேவதாஸ் பிள்ளை, சென்னை கலெக்டர் திவான் பகதூர் ஆர். இராமசந்திர ராவ் முதலிய பேரறிஞர்கள், பிள்ளையவர்களின் பேராற்றலையும், பெரும்புலமையையும், பெருங்குணத்தையும் பல படிகளானும் புகழ்ந்துரைத்து, தத்தம் அன்பையும் அநுதாபத்தையும் தெரிவித்துக் கண்ணீர் சொரிந்தனரென்ருல், ஆங்கு அவ்வேளை உடனிருந்த எம் போன்ற எண்ணிறந்த சிற்றறிவினர்தம் பேதை மனம் எவ்வாறிருந்திருக்கு மென்பதை விரித்துரைக்க வேண்டுவதில்லை!

பிள்ளையவர்களைப் பற்றிய புகழ்மாலை முடிந்தவுடன், அவர்தம் திருமேனி, கிருஸ்து திருச்சபை யாசாரமுறைப்

படி குருமார்களால் மந்திரிக்கப் பட்டவுடன், விலையுயர்ந்த அழகிய சவப்பெட்டியில் அடக்கஞ்செய்து கல்லறையில் அமர்த்தப்பட்டதும், உடன் சென்றிருந்த பெருங்குழுவினர் ஒவ்வொருவரும் கைம்மண்ணிட்டுவிட்டு வீடு திரும்புகையில், ஆகாயத்திலிருந்து சிறிய மழைத் துளிகள் எங்கும் நிறைந்து விழுந்தன ! (கஷ்டந்தரக் கூடிய பெருமழையன்று.) என்னே அப்பெரியார்தம் புண்ணியம் ! விண்ணோர் அப்பெரியாரை நல்வரவேற்று ஆனந்தக்கண்ணீர் சொரிந்தனர் போலும் !!

அதிகாரம்—8

புகழ்மாலை

சட்டசபைப் புகழ்மாலை

1925-ம் வருடம் அக்டோபர் மாதம் 7-ந்தேதி சென்னைச் சட்டசபை கூடியபோது, அச்சபை உறுப்பினர், தங்கள் தலைவர் திவான் பகதூர் சுவாமிக்கண்ணு பிள்ளையவர்கள் காலஞ்சென்றமைக்காக விசனித்து அநுதாபங் காட்டி, அவரது குணாதிசயங்களைப் புகழ்ந்து ஆங்கிலத்தில் பேசிய சொற் பெருக்குகளின் தமிழ்மொழிச் சுருக்கம் :—

சென்னை மாகாணத் தேசாதிபதியின் நிர்வாக சபை உறுப்பினர் கனம் சர். ஸி. பி. இராமசாமி அய்யர், Kt., C. I. E., பின் கண்ட தீர்மானத்தைப் பிரேரணை செய்தார் :

“ கனம் திவான் பகதூர் எல். டி. சுவாமிக்கண்ணு பிள்ளையவர்கள் காலஞ்சென்றதனால், அரசாங்கத்தாருக்கும் நாட்டுக்கும் நேரிட்ட மிகப்பெரிய நஷ்டத்தை இச்

126420

சட்டசபை வெளியிட்டு, அதற்குத் தக்க நிலையான குறிப்பொன்று எழுதிவைத்து, அவரை இழந்த அவர்தம் குடும்பத்தாருக்குத் தனது மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.''

இத்தீர்மானத்தைப் பிரேரணைசெய்து அவர் புகன்ற புகழ்மாலைப் பின்வருமாறு :—

126420

" திருவாளர் சுவாமிக்கண்ணு பிள்ளையவர்களின் தலைமையின் கீழ் இச்சபை கூடிப் பேசி வெகு நாட்களாய் விடவில்லை. அவர் இப்போது திடீரென நம்மைவிட்டுப் பிரிந்தது, மிகத் துக்கமே விளைக்கின்றது. அவர் நோய்வாய்ப்பட்டிருந்ததை யறிந்தபோது நமக்கெல்லாம் மிகப் பெரிய நடுக்கம் உண்டாயிற்று. ஆயினும், அவர் இறந்துவிடுவாரென ஒருவரும் நினைக்கவில்லை. அவருடைய தலைமையின் கீழ் இச்சபை நடைபெற்றபோது, அவர் பகர்ந்த கூரிய ஆலோசனையும், சபையை ஒழுங்காக நடாத்திய திறமையும் கேட்டுணர்ந்து நற்பலனெய்திய இச்சபையாராகிய நாம், அவரை இழந்ததால் நாட்டுக்கும், இச்சபைக்கும், அரசாங்கத்தாருக்கும் உண்டான மிகப் பெரிய நஷ்டத்தைக் குறித்துத் தக்கதோர் தீர்மானம் நிறைவேற்றிப் பதிவுசெய்யாவிட்டால், நமது கடமையைச் செய்யத் தவறினவர்களாவோம். பிள்ளையவர்களின் சரித்திரம் எல்லாருக்கும் நன்ருகத் தெரியுமாதலின், நான் அதைக் குறித்து அதிகம் சொல்லவேண்டியது அநாவசியமே. ஆயினும் இரண்டொரு முக்கியமான குறிப்புகளை மாத்திரம் பேசி முடிக்கிறேன்."

" சுவாமிக்கண்ணு பிள்ளையின் மிகப் பெரிய அறிவின் வல்லமையையும், சுறுசுறுப்பையும், நம்மில் பலரும் மாணவர்களாக இருந்தபோதே கேள்விப்பட்டிருக்கிறேரும் ''

எனக் கூறி அவர் இளம்பருவத்தில் கல்வி பயின்ற விவரத்தைக் குறிப்பிட்டனர். அவர் அரசாங்கத்தில் பல உயர்ந்த உத்தியோகங்கள் செய்துவிட்டு ஓய்வுபெற்ற பிறகும், ஹைகோர்ட்டில் நியாயவாதித் (வக்கீல்) தொழில் செய்ய விரும்பினார்போலும்! ஆதலின், தாம் ஒருகால் ஆரம்ப நியாயவாதி (Apprentices) கட்குச் சட்டச்சொற்பொழிவு செய்த காலையில், பிள்ளையவர்களும் ஆங்குச் சென்றிருந்து அதைக் கவனித்தனர் என்னும் ஓர் உண்மையை சர். ஸி. பி. இராமசாமி அய்யர் அதுகாலை எடுத்துக் கூறினர். இதனால் யாது விளங்குகிறது? பிள்ளையவர்களின் குன்றா அறிவின் சக்தியும், கல்வியில் அவருக் கிருந்த பேரூக்கமும் நன்கு புலனாகவில்லையா? முதிர்ந்தவயதிலும் கல்வியறிவை மேன்மேலும் வளர்க்கமுயன்றார் அம்மூதறிஞர்.

மற்றும், சர்.ஸி.பி. இராமசாமி அய்யர், பிள்ளையவர்கள் படிப்படியாய் மேனோக்கிச் சென்று உயர்ந்த பல அதிகாரங்கள் வகித்திருந்ததையும், அவரது பேராற்றலையும், குணாதிசயங்களையும் புகழ்ந்துரைத்து மேலுங் கூறியதாவது:—

"அவர் வீற்றிருக்கும் உத்தியோக அறையில் இடது கைப்புறம், சட்டசபைக் கேள்விகளும் தீர்மானங்களும் பிறவுமான காகிதக் கட்டுக்கள் அடுக்கிக்கிடக்கும்; வலது புறத்தில் இந்தியப் பஞ்சாங்கக் கணிதமும், அது சம்பந்தமான அரிய தமிழ்ப் பண்டை நூல்களும் அடுக்கி வைத்திருக்கும். 800 அல்லது 900 வருஷங்களுக்கு முன்னர், குறித்த ஒவ்வொரு தேதியிலும் என்னென்ன நிகழ்ச்சிகள் நிகழ்ந்தனவென்பதை ஆராய்ச்சி செய்துகொண்டிருப்பர். கிரகணம், நட்சத்திரம் ஆகியவற்றின் நிலைகளைக்கொண்டு தென் இந்திய தேசச் சரித்திர சம்பந்தமான நிகழ்ச்சி

களின் தேதிகளைச் சரியாகக் கணிக்க அரும்பெரும் முயற்சி செய்துகொண்டிருப்பர். ஏனையோருக்கு மிகக் கஷ்ட மாகவும் நீண்ட கால வேலைகளாகவுமிருந்தவை யெல்லாம், அவருக்குக் காலப்போக்குக்கான மகிழ்ச்சிவேலைகளாக இருந் தன! வானசாத்திரம், சோதிட சாத்திரம் ஆகியவற்றையும் அவர் நுணுகி ஆராய்ச்சிசெய்தார்.''

" நடுவு நிலைமையான உணர்ச்சி, பரந்து விரிந்த கல்வி, நிரம்பிய புலமை, அடக்கம் முதலிய சீரிய இலக்கணங்கள் வாய்ந்திருந்த அப்பெரியாரை நாம் இப்போது, அந்தோ! இழந்துவிட்டோம்!!"

அதன் பின், முதன் மந்திரி பனகால் ராஜா, " இம் மாகாணத்தில் மிகச் சிறந்த கனவான்களில் ஒருவராகக் கருதப்பட்ட திவான் பகதூர் சுவாமிக்கண்ணு பிள்ளையை நாம் இழந்துவிட்டோம். இம்மாகாணம் அடைந்த அந்நஷ் டம் ஈடுசெய்ய முடியாததொன்றாகும்'' எனக் கூறித் தீர்மானத்தை மிக்க அநுதாபத்துடன் ஆமோதித்தார்.

மைசூர் ராஜ்யத்தில் சில காலம் கல்வி இலாகாத் தலைவராக இருந்தவரும், இதுபோழ்து சென்னைச்சட்ட சபையில் சித்தூர் ஜில்லாப் பிரதிநிதியாக வீற்றிருப்பவரும், ஆங்கில மொழி வல்லுநருமான திருவாளர் சி. இராமலிங்க ரெட்டியார் தீர்மானத்தை ஆதரித்து மிக்க உருக்கமான சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தினர். அது காலை, பிள்ளை யவர்களைக் குறித்து அவர் செப்பிய சீரிய சில நன்மொழி களை மாத்திரம் ஈண்டுக் குறிப்பிடுவது விரும்பத்தக்க தாகும். அவையாவன :—

" நமது மாகாணத்தில் பொது ஜனங்கட்கு நெருங்கிய சம்பந்தமுள்ள அரசாங்க இலாகாகளில் நிர்வாகத் தலைமை

வகித்து, மிகச் சிறந்த பொது நன்மைகள் புரிந்து, அரசாங்க உத்தியோகத்தினின்றும் நீங்கி உபகாரச் சம்பளம் பெற்ற பின், அரசியல் துறையில் நுழைந்து என்றும் அழியாப் பெயரை நிலைநாட்டியவர் சுவாமிக்கண்ணு பிள்ளை யவர்களே யாவர். அவருடைய மரணம் இந்தியக் கிருஸ்துவ வகுப்பினருக்கு மாத்திரம் நஷ்டமன்று; எல்லா இந்தியர்கட்கும், இம் மாகாணம் முழுமைக்கும், இத்தேச முழுமைக்குமே ஒரு பெரிய நஷ்டமாகும்."

"நான் இங்கிலாந்தில் கேம்பிரிஜ் சருவகலாசாலையில் கல்வி பயின்றபோது, புரொபெசர் (ஆசிரியர்) பார்ட்டன் என்பார், ஐந்து பெரிய பரீட்சைகளில் முதல் வகுப்பில் தேர்ச்சியடைந்தவரெனச் சொல்லக் கேட்டிருக்கிறேன். இந் நாட்டில், சுவாமிக்கண்ணு பிள்ளையவர்களின் கல்லூரிச் சரித்திரத்தை ஆசிரியர் பார்ட்டன் சரித்திரத்துக்கு ஒப்பிடலாம். சட்டசபையின் முதல் காரியதரிசியாகவும், தேர்ந்தெடுக்கப்பெற்ற அதன் முதல் தலைவராகவு மிருந்தவர் அவரே யாதலின், அரசியல் துறையிலும் அவ்வாறே அவர் முதன்மை பெற்றனரெனச் சொல்லலாம். இவ்விரண்டும் சாதாரண பதவிகளன்று; மிக்க உயர்ந்த பதவிகளாகும். அவரை நான் அநேக ஆண்டுகளாக அறிவேன். அவருடைய மரணத்தால், மிகப் பெரிய ஒரு கல்வி நிபுணரையும், மிகச் சிறந்த ஒரு கனவானையும் நாம், அந்தோ! இழந்து விட்டோம்!!"

அறிவை யறிவது பொருளெனக் கருதி உழைத்த அறிஞர் சுவாமிக்கண்ணு பிள்ளை யவர்களே.

"அவர் தமது கல்வி ஞானத்தால் ஆராய்ந்தறிந்த மிகச் சிறந்த விஷயமொன்றை நான் இப்போது குறிப்பிட விரும்புகிறேன். மகாபாரத யுத்தத்திற்கு முன், அதன் (துன்ப)

அறிகுறியாகத் தோன்றிய நட்சத்திரங்களின் சேர்க்கை, சமீபத்தில் (1914ம் வருடம் ஆரம்பித்து 1920ம் வருடம் வரையில்) நடந்த மாபெரும் ஐரோப்பிய யுத்த ஆரம்ப காலத்திலும் தோன்றிய தென்பதைப் பிள்ளை யவர்களே முதன் முதலில் கண்டு பிடித்துத் தெரிவித்தார்கள். சட்ட சபை அங்கத்தினர்களிடத்திலும், நட்சத்திர இயக்கத்திலும் அவர் எத்துணை சுயேச்சையாகக் கலந்து பேசிக் கொண்டும் ஆராய்ச்சி செய்து கொண்டுமிருந்தாரோ, அத்துணை சுலபமாக அரசாங்கக் காகிதக் கட்டுக்களையும் படித்துப் பதில் எழுதி முடித்துவிடுவார்!''

"ஓதுவதொழியாப் பெரும் பண்டிதராகவும், அநேக மொழிகளையுங் கலைகளையுங் கற்றுணர்ந்த ஒப்புவமை யற்ற வல்லுநராகவு மிளிர்ந்தார்; அவருடைய ஜீவிய சரித்திரம், நமது மாகாணப் போதுஜன வாழ்க்கை எல்லா வகையிலும் உயர்வடைதற்கு ஒரு பாடமாக விருக்குமேன்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. அவர் தம்முடைய சீரிய அநேக தகுதிகளால் சட்டசபைத் தலைவர் பதவியி லமர்ந்து நம்மெல்லோருக்கும் பெருந்துணையாக இருந்தார். அதுவுமன்றி மரியாதைக்குப் பிறப்பிடம் அவரே யாவர். சட்டசபையில் அநேக மும்முரமான விவாதங்கள் நடந்தன; அவ்வொன்றிலாவது அவர் மரியாதைக் குறைவாகப் பேசினரென்று சொல்லமுடியாது. அஃதன்றியும், பொறுமையற்றுப் பேசின ரென்றுவது கூற இயலாது. எல்லா வகையிலும் மிகச் சிறந்த குணாதிசயங்கள் போருந்தியவராகவே விளங்கினர்.''

சென்னை அரசாங்கத்தில் முன் அபிவிருத்தி இலாகா மந்திரியாக இருந்த ராய்பகதூர் சர் K. வேங்கடரெட்டி நாயுடு, மேற்சொன்னவைகளை யெல்லாம் ஆர்வத்துடன்

ஆதரித்து நீண்ட சொற்பெருக்கிட்ட காலையில் பின் வருமாறு பேசினார்:—

"சுவாமிக்கண்ணு பிள்ளையைப்போல் அநேக பாஷைகளைக் கற்றுணர்ந்த மற்றொருவர் இத் தேசத்திலிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அத்துணைப்பெரும் கல்வியறிஞராகவிருந்தும், அவரிடம் **அடக்கம்** என்னும் ஒரு பெருங் குணம் சிறப்பாகக் குடிகொண்டிருந்தது."

"காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினூஉங் கில்லை யுயிர்க்கு"

என்னும் முதுமொழி இலக்கியத்துக்கு அவர் இலக்கணமாகப் பிரகாசித்தார் என்பது ஓர் அணுவளவும் மிகையாகாது.

"அவர் இரண்டு ஆண்டுகட்கு முன் இங்கிலாந்துக்குச் சென்றிருந்தபோது, பாராளுமன்றத்திற்குச் சென்றிருந்த காலை, அவர் ஆப்பிரிக்கா தேசத்தினராவென ஓர் உயர்ந்த ஐரோப்பிய அதிகாரி அவரைக் கேட்டனர். அவர் அதை மறுத்துச் சொல்லவில்லை. மீண்டும் அவ்வதிகாரி, பிள்ளையவர்களைத் தனித்துச் சந்தித்துக் கேட்டபோது, "மனிதர்களுக்குள் வித்தியாசமில்லை." எனப் பதில் பகர்ந்தனர்." நிறபேதங் கொண்டு ஒரு நாட்டினரை உயர்வாகவும் மற்றொரு நாட்டினரைத் தாழ்வாகவும் கருதுதல் கூடாதென்பதே யாம்.

அஃதன்றியும், இங்கிலாந்தில் பொதுமக்கட் கழகத் தலைவர் (The Speaker of the House of Commons) அப்போது அளித்த விருந்தொன்றுக்குப் பிள்ளை யவர்களும் சென்றிருந்தனர்; அவ்விருந்துக்குச் சென்றிருந்த ஓர் ஐரோப்பிய சீமாட்டி, பிள்ளையவர்களை நோக்கி, "தங்கட்கு ஆங்கிலம் பேசத் தெரியுமோ?" என ஐயமுற்றுக்

கேட்டனள்! அவ்வம்மையார், தமது அறிவு குறுகிய நோக்குடைய தென்பதை அக்கேள்வி முகத்தான் அறிவித்தது விசனிக்கத்தக்கதே! பிள்ளையவர்கட்குத் தெரியாத ஐரோப்பிய பாஷை ஒன்றேனுமில்லையெனப் பதில் அளித்த போது, "அடக்கம்" எனும் பொக்கிஷம் மக்கட்குப் பிறப்புடன் பொருந்தியிருக்கவேண்டிய ஒரு சிறந்த இலக்கணமாகு மென்பதையும், அவ்வம்மையாரும் மற்ற ஐரோப்பியரும் அதைக் கற்கவேண்டுமென்பதையும் அப்போதுதான் அவ்வமையார் உணர்ந்துகொண்டார்.

"அடக்கமுடையார் அறிவிலர் என்றெண்ணிக் கடக்கக் கருதவும் வேண்டாம்"—என்னுந் தண்டமிழ் அறிவுரையை அந்த ஐரோப்பியர் அறிந்திருப்பாராயின், அவ்வாறு நம் கல்விக்களஞ்சியத்தைக் கேள்வி கேட்டிருக்கமாட்டார்.

மேலும், பிள்ளையவர்கள், (கோபங் கொள்ளாது) அவ்வளவு பொறுமையுடனும், அடக்கமுடனுமிருந்து, நிற பேதத்தாலேயே மனிதர்கட்குள் உயர்வு தாழ்வு குறிக்கும் அந்த ஐரோப்பியருக்குப் புத்தி வருமாறு பதில் அளித்திருப்பதை நாம் யாவரும் பாடமாகக் கொள்ளல் வேண்டும்.

சென்னை அரசாங்கப் பண இலாகாத் தலைவர் (Finance Member) கனம் டி. இ. மாயர் துரை சொற்பெருக்கிட்ட காலையில், பிள்ளை யவர்களைக் குறித்துப் பின் வருமாறு பேசினர் :—

"இந்நிகழ்ச்சியில் நானும் தலையிட்டுப் பேச விரும்புதல், சுவாமிக்கண்ணு பிள்ளை யவர்களைக் குறித்து இதுகாறும் கூறிய அன்பின் புகழ்ச்சி வார்த்தைகளுடன் எவ்விதத்திலாயினும் நான் அதிகமாகச் சேர்த்துக் கூற முடியுமென்பது கருதியன்று. ஆனல், அரசாங்க அதிகாரிகளும் அதிகாரிகளல்லாதவர்களுமாகிய என் வகுப்பினர் (ஐரோப்

பியர்) சார்பாக, இதுகாறும் பேசியவர்கள் செப்பிய விஷயங்களை முற்றிலும் ஆதரித்துப் பேச விரும்பியே முன்வந்தேன். அநேக துறைகளில் வல்லவராக விளங்கிய சுவாமிக்கண்ணு பிள்ளையை இழந்தமைக்காக நாங்கள் யாவரும் பெரிதும் விசனிக்கிறேம். அவர் மிக்க அநுபவம் வாய்ந்தவரும், மனச் சாட்சிக்கு விரோதமின்றி நடக்கும் அரசாங்க அதிகாரியுமாக இருந்தார் என்பது மாத்திரம் எங்களில் சிலர் அறிவார். அவர் கல்வி நிபுணர் என்னும் முறையில் சிலர் அவரை அறிவர். அவர், பழுதற்ற ஆலோசனையும், மறுக்க முடியாத செம்மை மனமும் உடையவர்.''

''அவருடைய பாண்டித்தியத்துக்குத் தக்கவாறு அவர் இன்று புகழ்மாலைகள் சூட்டப்பெற்றனர். அவர் ஒரு பெருங்கல்வி வல்லவராயிருந்தது மன்றி, 'அடக்கம்' என்னும் ஓர் அரும்பெருங்குணத்திற்குத் தாமே தாயகமாயிருந்தார். பாண்டித்தியமுடையாரிடம் பொதுவாகக் கல்விச் செருக்கும் பிடிவாத குணமுமிருக்கும். ஆனல் அவரிடம் இவை யிரண்டுந் தலைகாட்டாமலிருந்தன. காரணமென்ன வெனில், அவர் தமது ஜீவியகாலம் முற்றிலும் மேன் மேலும் கல்வி பயின்று, அறிவை வளர்த்த ஓர் உண்மை அந்தணராகவேயிருந்தார். என்னுடைய சொந்த தேசமாகிய ஸ்காத்துலாந்து தேசத்தில், பாண்டித்தியமென்பது, காருண்ய வடிவமெனச் சொல்லுவதுண்டு; அச் சொல் இன்றும் ஆங்கு வழங்குகிறது. அவ் விலக்கணத்தில், பிள்ளையவர்கள் (இந்நாட்டில்) தலை சிறந்து விளங்கினர்கள். அவருக்கு எத்துறைக் கல்வியும் எளிதாகவிருந்தது.''

''இச்சபைத் தலைவராக இருந்தபோது நம்மெல்லோர் பாலும் அவர் காட்டிய உபசரிப்பும் மரியாதையும் நாம் எளிதில் மறக்கமுடியாதவை. அவருடைய ஜீவிய சரித்

திரத்தில் மற்றொரு சிறந்த விஷய மென்னவெனில், அவ ருக்கு விரோதி யென்பார் ஒருவர்கூட இல்லாதிருந்தமையே யாகும். அவரை அறிந்தோர் எல்லாருடைய அன்பையும் மதிப்பையும் அவர் பெற்றிருந்தனர்.''

சட்டசபை உபத்தலைவர் (டெபுடி பிரசிடெண்டு) திவான் பகதூர் கேசவப் பிள்ளை யவர்கள் பின் வருமாறு பேசினர்:—'' சுவாமிக்கண்ணு பிள்ளை, ஏழைகளுக்கும் ஆதரவு அற்றவர்கட்கும் உதவி புரியும் ஏழைப் பங்காளர். ஒவ்வொரு நாளும் நூற்றுக் கணக்கான பேர் அவரிடம் சிபார்சு கடிதம் பெறவருவார்கள்; வகுப்பு வித்தியாசம் பாராட்டாமலும் மனங்கோணாமலும் எல்லாருக்கும் உதவி செய்வர்; அவர், உதவி மறுத்ததே கிடையாது.''

இவ்வாறு இன்னும் பல கனவான்களும் தத்தம் சீரிய அநுபவங்களையும் அபிப்பிராயங்களையும் வெளியிட்டனர். முடிவில், அநுதாபத் தீர்மானம் எல்லோராலும் ஒரே மனதாய் ஆதரிக்கப்பெற்று நிறை வேறிற்று.

பொதுஜனப் புகழ்மாலை

1925ம் வருடம் நவம்பர் மாதம் 5-ந் தேதி, சென்னை நகரத்தில் 'விக்டோரியா' மண்டபத்தில், சென்னை மாகாணத்தேசாதிபதியின் (கவர்னரின்) தலைமையின்கீழ் சென்னை நகரவாசிகளின் பொதுக் கூட்டமொன்று, பிள்ளை யவர்கள் காலஞ்சென்றமைக்கு அநுதாபங்காட்டக் கூடிற்று. அவ்வமயம் ஆயிரக்கணக்கான பேர், அதிகாரிகளும் அதி காரிகளல்லாதவர்களும், கல்வி யறிஞர்களும், கனதனவான் களுமாகக் குழுமியிருந்தனர். அப்போது, அவரது கல்விப் புலமையையும் பல சிறந்த குணாதிசயங்களையும் வல்லமை யையுங் குறிப்பிட்டுப் பல அறிஞர்கள் பேசினர்கள்.

தேசாதிபதியின் சொற்பொழிவு மிக்க உருக்கமாக இருந்தது. "சுவாமிக்கண்ணு பிள்ளையவர்கள் பளிங்கனைய தெளிந்த மனமுடையார்; கூர்த்த மதியினர்" என்பதாகவும் இன்னும் பலவாறுகவும் தேசாதிபதி புகழ்ந்துரைத்தார்.

சென்னைச் சட்டசபை மண்டபத்தில், அவரது உருவந் தாங்கிய சலவைக் கற்சிலை யொன்று நிறுத்தல் வேண்டுமெனவும், அவர் தம் பெயரால் சருவ கலாசாலையில் ஆராய்ச்சிசெய்யும் மாணவர்கட்கு ஓர் உபகாரச் சம்பள நிதி குறித்துவைத்தல் வேண்டுமெனவும் ஒரு தீர்மானம் நிறைவேற்றினர்.

அதிகாரம்—9

இல்லறவியல்

திரிசிராப்பள்ளியில் ஆங்கில மொழியில் வெளிவரும் "மார்னிங் ஸ்டார்" என்னும் மாதப் பத்திரிகையில், கனம் பிள்ளையவர்களின் அருமைப் புத்திரிகளில் ஒருவரும், கன்னியாஸ்திரீப் பட்டம்பெற்று, குண்டூர் கன்னியா ஸ்திரீ மடத்திலிருப்பவருமாகிய சகோதரி மேரி அம்மையார், தங்கள் தந்தையார் தங்களுடன் கூடிக் குலவி அன்பு செலுத்தி வந்த சில நுண்ணிய இல்லற வியலின் சிறப்புக்களை எழுதியிருக்கின்றார். அவற்றின் சுருக்கத்தையே ஈண்டு எழுதத்துணிந்தேன்:—

" தம்முடைய பிள்ளைகள்பால் அவர் பேரிதும் அன்பு பாராட்டி வந்தார். இதுவே என்னுடைய முதல் அநுபவம். பிள்ளைகளின் (சிறு பிராயத்திற்குரிய) குற்றமற்ற களி

யாட்டை (மகிழ்ச்சி விளையாட்டை) அதிகரிக்கச்செய்யும் யாதொன்றையும், அவர் தம்முடைய சொந்த சௌகரியத்தைக் கருதி, தடுத்து விடமாட்டார்.''

"குற்றமற்ற'' என்ற வார்த்தையை நான் ஏன் உபயோகித்தேன் என்ருல், அவர் ஒருபோதும் பிள்ளைகள் மனம் போல் நடத்தற்கு (பிழைபடக்கூடியவைகளுக்கு) இடங் கொடுக்கும் தந்தையரல்லர். நான் பின்னர் சொல்லும் பொருள்களால் அது நன்கு மெய்ப்பிக்கப்படும். அக்காலத்தில் (எங்களுடைய சிறு பிராய காலத்தில்) பொதுவாக அவர் இரவு 8-மணிக்குத்தான் (ஆபீசிலிருந்து) வீடுவந்து சேர்வார். ஆனல், நாங்கள் அவரைப் பாராமல் படுக்கைக்குப் போகமாட்டோம். தூக்கம் என்னும் மாயக் கள்வன் ஒருகால் தன் கொடுங்கைகளால் எங்கள் கண்களை மூடிவிட்டாலுங்கூட தந்தையார் வருகின்ருர் என்னுஞ் செய்தி கேட்டவுடன், நாங்கள் எல்லோரும் துடித்தெழுந்து விரைந்தோடி வாசற்படியில் நின்று கொண்டு அவரை மகிழ்ச்சியுடன் வரவேற்போம். உடனே தூக்கம் பறந்தோடிப் போம்!''

"ஆனல், அப்போதுங்கூட அவரைக்கண்டு பேச பலர் காத்துக்கொண்டிருப்பார்கள். அவர்கள் ஏதாவது வேலை விஷயமாக வந்திருந்தால், பேச வேண்டியவற்றை விரைவில் பேசி முடித்து, அவர்களைக் காக்க வையாமல் உடனே அனுப்பி விடுவர். ஏனெனில், சிறு பிள்ளைகளாகிய எங்களுடைய களிப்பையும் சலிப்பையும், தினசரி நிகழ்ச்சிகளைப் பற்றி நாங்கள் சொல்லும் மழலைச் சொல்லாலாய வேடிக்கைக் கதைகளையுங் கேட்க அவர் அவா மிக்குடையவராக இருப்பர். எங்களுடைய முதல் பேச்சாகிய தினசரி

நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசி முடிந்தவுடன், நாங்கள் ஜபத்துக்குச் செல்லுவோம். பிறகு இராப்போஜனம் முடிப்போம். அவர் தம்முடைய மிதமான உண்டியை விரைவில் சாப்பிட்டுவிட்டு, தம்மிடத்தில் செறிந்து கிடக்கும் பொக்கிஷக் குவியலாகிய நகைச் சுவை நிரம்பிய (அறிவுச்சுடர் கொளுத்தும்) வேடிக்கைக் கதைகளைச் சொல்லி எங்களை மகிழ்ச்சிக்கடலில் திளைக்கவைப்பார்!''

''தம்முடைய புத்திரர்கள் முதலிய குடும்பத்தினர் தம்மைச் சூழ்ந்திருக்குங் காலத்தைத்தவிர, வேறு எக்காலத்தும் தாம் மகிழ்வுற்றிருந்ததில்லை யென்பதைப் பன்முறை அவர் பகர்ந்திருக்கின்றார். இராச்சாப்பாட்டை முடித்துக்கொண்டு உடனே எழுந்துபோக அவர் ஒருபோதும் துரிதப்பட்டதில்லை. ஏனெனில், அக்காலந்தான் எங்களுடைய குடும்ப இரகசியப் பேச்சுக்கும் களியாட்டுக் கதைக்கும் ஏற்ற காலமாகும். அவர், பிறருடைய தனித்த சொந்த விஷயத்தில் தலையிட்டுக்கொள்ளார். ஆகையால், எங்களில் ஒவ்வொருவரும், அவர் ஒவ்வொரு விஷயமும் அறிந்திருக்கவேண்டுமென்றும், எங்களுடைய இரகசியங்களை (சொந்த எண்ணங்களை) யெல்லாம் அவருக்கும் அறிவிக்க வேண்டுமென்றும் விரும்பினோம்.''

''இராப்போஜனம் முடித்து, அவர் தம்முடைய உத்தியோக அறைக்கு (Office room) ச் செல்லும்போது, அவருடைய அருமைச் சிறுவர்களாகிய நாங்கள் இன்னுஞ் சில விநோதக் கதைகளைச் சொல்லும்படி வேண்டிக்கொண்டே பின்றொடருவோம். இதற்குள் தூக்கம் என்னுங் கள்வன் வந்து எங்களுடைய கண்களைக் கெட்டியாய் மூடிவிடுவான்! பிறகு, அக்காள், அத்தை, அல்லது அம்மா அவர்களோ

வந்து எங்களை எங்கள் படுக்கைக்குத் தூக்கிக்கொண்டு போய்ப் படுக்கவைப்பார்கள். அவ்வாறு அவர்கள் எங்களைத் தூக்கிக்கொண்டு போகும்போது ஒருகால் நாங்கள் விழித்துக்கொள்ளுவோமானால், உதறித் தள்ளிவிட்டு மீண்டும் எங்கள் அருமைத் தகப்பனாரிடம் ஓடுவோம். அவ்வேளைகளில் எங்களைப் படுக்கையில் கிடத்த அவரே எழுந்து வருவார். அவர் அரிய பெரிய நூல்கள் இயற்றுவது போன்றே, அவருடைய அருமை மக்களாகிய எங்களைச் சந்தோஷப்படுத்தத் தாமாகச்சொந்தத்தில் விநோதக் கட்டுக்கதைகளையும் கவிகளையும் (பாக்களையும்) அவ்வப்போது சொல்லுவர். அக்கதைகளும் கவிகளும், குழவிப்பருவமுடைய சிறுவர்களாகிய எங்களை மகிழ்வித்ததுமன்றி, புதிய கருத்துக்களையும் எங்களுக்குக் கற்பித்தன. இவ்வகையான கதைகளுக்கும் கவிகளுக்கும் அவர் ஓர் பிறப்பிடமாக இருந்தார் !"

"பெரிய விஷயங்களை யெல்லாம் ஞாபகத்தில் வைத்திருப்பதுடன் இச்சிறிய விஷயங்களையும் பொருட் படுத்தி எவ்வாறு ஞாபகத்தில் வைத்திருக்கின்றாரோ வென்பது, பிற்காலத்தில் எங்களுக்கு ஓர் அதிசயமாகத் தோன்றிற்று. சித்திரப்படப் புத்தகங்கள் வாயிலானே இவ்வகைக் கதைகளை யெல்லாம் எங்களுக்கு விளங்கவைப்பர். எங்களுடைய அருமைக் கதைக்காரர், நிலையற்ற இம்மாயா உலகச் சுகத்தை விட்டு நீங்கிச் சென்றது போன்றே, அப்புத்தகங்களும் நெடுநாளைக்கு முன்னரே மறைந்தொழிந்தன !"

"எங்களுடைய குழவிப் பருவத்திலேயே எங்களுடைய மனத்தைக்கவர்ந்த அவருடைய திடமான குணாதிசயங்களைப் பற்றிச் சிறிது கூற விரும்புகிறேன். யாதாயினும் ஒன்றை எங்களுக்குச் செய்ய ஒருதரம் மறுத்துக் கூறிவிடுவாராயின்,

மீண்டும் அவ்விஷயத்தில் தமது அபிப்பிராயத்தை மாற்ற மாட்டார். எங்கேயாவது வேடிக்கையாய் வெளியேபோய் உல்லாசமாய்ச் சுற்றிவருதல் வேண்டுமென்னும் எண்ணங் கொண்டு, அதற்கு எங்கள் தாயாருடைய சம்மதத்தைப் பெற்றபிறகு எங்கள் அருமைத் தகப்பனாரிடம், அதற்கு என்ன சொல்லுவரோ வென்னும் ஐயுறவுகொண்ட அச்சத்துடன் செல்லுவோம். நாங்கள் அவரிடம் வைத்திருந்த அன்பு எத்துணை அதிகமோ அத்துணை அச்சத்துடன் கூடிய மரியாதையும் அவர்பால் எங்களுக்கு உண்டு. எங்களுடைய வேண்டுகோளை அவர் அங்கீகரித்தால் மகிழ்ச்சியுறுவோம்; அங்ஙன மில்லையாயின், நாங்கள் அழுவோம். எப்படியாயினும் எங்களைத் தக்கவிதத்தில் சமாதானப் படுத்துவர். ஆனால், நாங்கள் மிகப்பலமாக விரும்பிய விருப்பத்தைச் சாராத சமாதானமாகவே யிருக்கும் அது. எங்கள் மனம்போல் விரும்பியவற்றை யெல்லாம் நாங்கள் அவரைக் கேட்கமுடியாது. அவர் அத்துணை உயர்ந்தநிடம் பெற்ற ஒரு கொள்கை யுடையவராகவே யிருந்தார்.''

''எங்களுக்குத் தீங்குசெய்யக் கூடிய எந்த விஷயத்தையும் நாங்கள் ஓர் அணுவளவும் கவனியாவாறு அவ்வளவு ஜாக்கிரதையாக எங்களை வைத்திருந்தார். உதாரணமாக, பூதக்கண்ணாடி வாயிலான் சித்திரப்பட உருவங்களைப் பெரிதாகக்காட்டிக் கூத்து நவிற்றும் ''பயஸ்கோப்'' என்னும் நாடகக் கொட்டகை, நாடகர் நடிக்கும் அரங்கக்கூத்து ஆகியவற்றிற்கு எ ங் க ளை ப் போகவிடார். பரீட்சைக்காக, 'ஷேக்ஸ்பியர்' என்பவரின் உயர்ந்த ஆங்கில நாடகங்களை அவர் எங்களுக்குக் கற்பித்தாராயினும், அந் நாடகக் கூத்துக்களை, நாடக அரங்கத்திற்குச் சென்று

பார்த்தற்கு அவர் எங்களை விடுவதில்லை; ஏனெனில், அவையெல்லாம் மனோவிகாரத்தை யுண்டுபண்ணக்கூடியவை யானதால்தான். ஆனால், தேகபலத்தாலும் சாமர்த்தியத்தாலும் காட்டக்கூடிய வீரச் செய்கையான விளையாட்டுகள், மிருகவிளையாட்டுகள் நடைபெறும் வேடிக்கைசாலை (சர்க்கஸ்) ஆகியவற்றிற்கு மாத்திரம் எங்களை யனுப்புவர்.''

"அவரது மற்றோர் உறுதிப்பாட்டை யறிவிக்க விரும்புகிறேன்: நாங்கள் கல்லூரிக்குச் செல்லத் தொடங்கிய நாள்முதல், ஆங்கில மொழியிலேயே நாங்கள் அவருடன் பேசவேண்டுமென்பது ஓர் உறுதியான கட்டளை. அவர் ஆங்கிலத்தில் மொழிவதை நாங்கள் எவ்வாறாயினும் அறிந்து கொண்டு ஆங்கிலத்திலேயே பதில் அளித்தல் வேண்டும். நாங்கள் ஆங்கிலத்தில் பேசாவிட்டால் நாங்கள் சொல்லுவதைக் காதுகொடுத்துக் கேட்க மறுத்துவிடுவர். அதுமுதல் (நான் கல்விகற்கத்தொடங்கிய கால முதல்) அவருடைய இறுதிக்காலம் வரையில் அவர் என்னிடம் தமிழில் ஒருவார்த்தையேனும் பேசினவரல்லர்.''

தமிழ்மொழியில் ஆர்வமுடைய அவர், ஆங்கிலமொழியில் தமது புதல்வர்களைச் செவ்வனே தேர்ச்சி செய்விப்பான் வேண்டியே அத்தகைய உறுதியான கொள்கையைக் கைக்கொண்டார் போலும்.

"அவருக்கிருந்த பற்பல வேலைகளுக்கிடையில், வீட்டில் எங்களுக்குப் பாடங்கள் கற்பித்து சத்திய (கிருஸ்து) வேதக்கோட்பாடுகளையும் விளக்குவர். ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10-மணிக்கு உட்கார்ந்து பகல் 1-மணிவரையில் இடையறாது எங்களுக்கு ஞானோபதேசம் போதிப்பர்; நாங்கள் காலை உண்டியை முடித்து அதற்காக உட்காருவோம்; பிறகு மத்தியானவேளைச் சிற்றுண்டிக்குத்தான்

எழுந்திருப்போம். "குழந்தைகள் களைப்படைந்திருக்கும்" என்று எங்கள் அருமைத் தாயார் பன்முறை சொன்ன பிறகேதான் நாங்கள் எழுந்திருக்க அநுமதிபெறுவோம். இதற்கே இவ்வாறிருப்பின், பரீட்சைக்கு எத்துணை உறுதியாகவும் ஊக்கமாகவும் எங்களைப் பயில்வித்திருப்பார் என்பது நான் சொல்லாமலே நன்கு விளங்கும்! எங்களுடைய கஷ்டங்களை யெல்லாம் தமதாகப்பாவித்து, அவற்றைப் பொறுமையாக ஆராய்ந்தறிந்து தக்க ஏற்பாடு செய்வர். எங்களுடைய பரீட்சைக்கு அடுத்த முந்திய சில நாட்கள் அவருக்கு மிகக் கவலையுள்ள நாட்களாயிருக்கும். என்னென்ன கேள்விகள் பரீட்சைக்கு வரக்கூடுமென்பதை ஒருவாறு ஆராய்ந்துணர்ந்து முன்னதாகச் சொல்லுவர்."

"கேம்பிரிட்ஜ்" சர்வகலாசாலைப் பரீட்சைக்குப் படித்த என்னுடைய சகோதரி சகோதரன் ஆகியவர்களுக்கு அவர் கல்வி பயிற்றுவித்த அநுபவத்தையே நான் இப்போது கூறுகிறேன்: எங்களுடைய தகப்பனார் முன்னுணர்வால் ஆய்ந்து அறிவித்த பரீட்சைக் கேள்விகள் 10-க்குக் குறைந்த பட்சம் 6 கேள்விகள் வீதம் சரியாக இருந்ததென்பதை என் சகோதரர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்."

மற்றும், "ஒருகால் ஒருபெரிய திருவிழாவுக்கு எங்கள் தகப்பனார் போகாமலிருந்தபோது அதற்காக வருத்தமடைந்த ஒருவரிடம் அவர் செப்பிய பதிலாவது யாதெனில்: "உங்களுடைய திருவிழாவுக்கு வந்திருக்க என்னினும் தகுதிமிக்கார் எவராயினும், அவரினும், நான் வீட்டிலிருந்து அருமைச் சிறுவர்களுடைய நலத்தைக் கவனித்ததால், நான் அதிகக் குற்றஞ்செய்துவிட்டதாக நான் நினைக்கவில்லை." என்பதேயாம்.

“சோம்பல் குணத்தை ஒரு பெரும் பேயாகக்கருதி அவர் அதைப் பெரிதும் வெறுப்பவராகையான், எங்களே, படித்தல், வீட்டில் வேலே செய்தல், அல்லது (சிறுவர்) விளே யாட்டு ஆகியவற்றிலேயே கவனஞ்செலுத்துமாறு செய்து எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கச்செய்வர். சீட்டு விளே யாட்டை (Card-playing) அவர் அருவருப்பர். ஒருகாலத் தில் பிரான்சு தேசத்தை அரசாண்ட பைத்தியம் பிடித்த அரசன் ஒருவனேக் களிப்பித்தற்காகச் சீட்டு விளேயாட்டு கண்டு பிடிக்கப்பட்டதாக அவர் சொல்லுவது வழக்கம். ஏதாவது ஓர் ஓய்வுநாளில் வீட்டில் எங்களுக்கு வேலேயில்லா திருந்தால், அவர் தமது வேலேயை நிறுத்திவிட்டு, எங் களேக் கடற்கரைக்கோ, பொருட்காட்சிச் சாலேக்கோ (Museum) அழைத்துக்கொண்டு போவார்; அன்றி மலேப் பிரதேசத்தில் (நீலகிரி முதலியவற்றில்) வசிக்குங்கால மாயிருப்பின், நெடுந்தூரம் நடந்து செல்லுதற்கு அழைத்துக் கொண்டு போவர்.”

“அடக்கம் என்பது மிக்க வலிவுள்ள ஒரு சிறந்த பெருங்குணமாக அவரிட மிருந்ததென்பதற்கு ஐயமின்று. கஷ்டங்களும் இழிந்த சொற்களும் அவரிடம் காணவே முடியாது. பொது சமூகத்திலிருந்தோ தனி மனிதர்களிடமிருந்தோ அவர்மீது பாயும் அம்புகளே (காரண மற்ற பழிவார்த்தைகளே அல்லது பொறாமையான வசைமொழிகளே)க் கண்டு கடுங்கோபங்கொள்ளார்! அதுவே யன்றி நாவடங்கா வசைச்சொற்கள் ஒருபோதும் மொழியார். தம் மீது யார் என்ன பழி சொன்ன போதி லும், அவர்களேக் குறித்து அவர் ஒருபோதுங் கடுஞ் சொல் பகர்வதில்லே. இந்நீர்மைத்தாய அருங்குணங்கள்

அவரிடமிருக்கின்றனவென்பதை நாங்கள் நன்கு அறிவோமாதலான், அத்தகைய விஷயங்களைப் பற்றி நாங்கள் அதிகமாகக் கவனிப்பதேயில்லை. ஆனால், அக்குணங்கள் இதுபோழ்து அதிசயிக்கத்தக்கவையாக விருக்கின்றன. ஏனெனில், ஒருவருக்குப் பிறரால் கோபம் உண்டுபண்ணப்பட்டபோது, அவரை வைதல் மிகச் சுலபமாகவும் வழக்கமாகவுமிருக்கிறது! அவர் அங்ஙனமின்றி, எல்லாவற்றையும் மனம் பொறுத்துக்கொண்டு, எல்லாம் கடவுளிடமிருந்து வந்ததாகக் கருதினர்.''

மேலும், தாம் ஒருகால் அக்குற்றங்களைச் சுமத்தற்குரிய தீவினையுடையவரோ வென்றெண்ணுவர். அதுவுமன்றி, (தம்முடைய நிலைமைக்கு) முதற்கண் கடவுளுக்கு மிக்க மனமார்ந்த நன்றி செலுத்துவர்; இரண்டாவது, எவ்விதத்திலாயினும், தமக்கு உதவி புரிந்த சகோதர ஜீவன்களுக்கெல்லாம் நன்றி செலுத்துவர். அவர் எழுதும் கடிதங்களில் தம்பாலும் தம் புத்திரர்கள்பாலும் கடவுள் காட்டும் கருணையை வியந்து, அப்பெருங்கருணைக்குத் தாம் முற்றிலும் தகுதியுடையவரல்லரென்று அடிக்கடி கூறுவர். அவருடைய நண்பர்கள் பெரியோர்களாயினுஞ் சரி, சிறியோர்களாயினுஞ் சரி எல்லோரையும் அடிக்கடி நினைத்துக்கொள்ளுவர்; அவர்களைப்பற்றி எங்களிடம் அடிக்கடி பேசுவர். முக்கியமாய், அவர் கல்விபயின்ற காலத்திலிருந்த ஆசிரியன்மார்களைக் குறித்தே அவ்வாறு ஞாபகங் கொள்வர். காலத்தினாற் செய்த நன்றி ஞாலத்தின் மாணப்பெரிதாதலின், அவர் தமது இளம்பருவத்தில் கற்றுக்கொண்ட கல்வியின் பயனைத் தமது வாழ்நாள் முழுதும் நன்றி யறிதலுடன் அநுபவத்தில் காட்டினர்.''

"நாடோறுங் காலந்தவறாமல் கோவிலில் நடைபெறும் பூசை நைவேத்தியங்களுக்கும், ஜபம் முதலியவற்றிற்குஞ் செல்ல எப்போதும் மிக்க விருப்பங்கொண்டிருப்பர். அவருக்கு ஒரு தடவை திடீரென இடர் ஒன்று நேர்ந்து, படுங்காயம் ஒன்று பட்டபோது, பெருந்துன்பங்களைச் சகித்துத் தம்மைத்தாமே ஒறுத்த அன்புருவாகிய யேசு நாதரைப்போன்று தமக்கும் துன்புறுதற்குச் சிறிது அமயம் நேரிட்டதெனச்சொல்லி மகிழ்ச்சிபடைந்தார்! அவர் தமக்கு எவ்வகை இடர்வரினும் பொறுமையுடன் கஷ்டத்தை வெளியிடாமலிருந்தமையானது, உண்மையில் மிக்கதோர் உயர்ந்த கொள்கையாகும்."

"ஏழைகட்குத் தருமஞ்செய்யவேண்டு மென்னும் அவசியத்தை அவர் எங்கட்கு வலியுறுத்திப் போதித்தார். தருமஞ்செய்தற்காக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் எங்கள் ஒவ்வொருவருக்கும் கொஞ்சங்காசு கொடுப்பர். நாங்கள் சிலவேளை தவறி நடந்து யாதாயினுமொரு குற்றம்புரிந்தபோதும், அப்போது எங்களைத்தண்டித்தற்குப் பதிலாக, ஆழ்ந்த கருத்தமைந்த அமைதியான வார்த்தையே மொழிவர். "என்ன மதி இது (அறிவு)?" என்னுங் கேள்விகேட்டு, எங்களுடைய அறிவின்மைக்காக இரங்குவர். உடனே, நாங்கள் நடந்துகொண்ட தகுதியற்ற செயலை யறிந்து, அவருடைய அன்பு நிறைந்த உள்ளத்தைத் துன்புறுத்தியதற்காகப் பெரிதும் விசனிப்போம். உண்மையில் அவரிடம் பரந்துவிரிந்த ஆழ்ந்த அறிவு குடிகொண்டிருந்ததுடன், ஆடம்பரமற்ற தன்மையும் தூய்மைக்குணமும் பொருந்தியிருந்தன."

இவையாவும், இல்லறஞானிகளுடைய இயற்கைப் பண்புகள் என்பதை வாசகர்கள் நன்கு உய்த்துணர்தல் வேண்டும்.

அரியதில் அரியோன் காண்க
பெரியதில் பெரியோன் காண்க
பீடுடைசாமிக் கண்ணேனும் பெற்றியன் காண்க!!

அதிகாரம்—10

அன்புமாலை

திவான் பகதூர் எல். டி. சுவாமிக்கண்ணு பிள்ளை, சி.ஐ.இ., ஐ.எஸ்.ஒ., அவர்கள் சென்னைச் சட்ட நிரூபண சபையின் தலைவராக நியமிக்கப்பட்டதை முன்னிட்டு அவர்களுக்கு, சென்னை இந்திய கிருஸ்துவர்களால் உபசார விருந்து நடத்துவித்த காலையில் பாடப்பெற்ற வாழ்த்துப் பாக்கள்.

I

அன்புரு வாகி அருளொளி யாகிய
இன்பப் பெருமான் எழில்நலத் தாலே
பழுத்த கேள்வியும் பண்புறு நண்பும்
விழுப்பந் தருமோர் ஒழுக்கமும் போற்றினை.
திருந்தாச் செய்கைத் தினையுங் கொள்ளலை
விருந்தாய் உணர்வை விரிவாய் வழங்குவை.
பிறந்தோர் வாழ்க்கையிற் சிறந்தோ ராதலே
பிறர்க்குரி யாளர்தம் பெருநெறி கொண்டனை.
அருள்வல மிகுந்த அருந்தமி ழதனிலும்

பொருள்நலம் சாரும் போற்றரும் புகழின்
ஓங்கிய கேள்வி ஆங்கில மொழியும்
பாங்கு மிகுந்த பண்புள பிரெஞ்சும்
ஜெர்மன் மொழியும் செவ்விதின் உணர்ந்து
மர்மம் தெளிந்து மாண்புற விளங்கினை.

ஏதமில் நெறியே என்றும் பற்றினை
கோதமி லாதநற் கொள்கையில் திளைத்தனை.

அறிவின் மிக்க ஆராய்ச்சி யுளத்தின்
செறிவினைக் கொண்டு செந்நெறி படர்ந்தனை.

அடக்கமே பொருளென அறிந்த பெருந்தகை !
கடத்தற் கரிய கலைக்கடல் கடந்தனை.

நானிலந் தன்னில் நாவலர் காவலர்
வானவர் போற்றும் மதியென வயங்கினை.

பேரறி வாள ! பெருந்தகை யாள !
ஊரறி பெரும்புகழ் உலைவப் பெற்றனை.

அவ்வவர் நூற்பொருள் அடுத்தடுத் தறிந்து
எவ்வெவர் மதிப்பும் என்றும் ஏற்றனை.
காலக் கணிதக் கலைக்கட லதனில்
ஞாலந் தொழவே தோன்றி நின்றனை.

கள்ளச் சிந்தை கடுக்ள விலார்போல்
வெள்ளிக் குன்றை மிகக்குடைந் தாலெனத்

திருமணி குயின்ற திருமா ளிகைதனில்
குருமணி யென்னக் குலவிக் கழக

மாந்தர் திலகமாய்ச் சாந்தம் பூத்தனை
சாய்ந்த பூவணைப் பள்ளியிற் சார்ந்தனை.

பணக்கல மெனுமுளப் பண்புள நின்னை
வணங்குதல் அல்லது வாழ்த்துதல் இயலுமோ?
அவைதனில் முந்தி அமைவுற அருளிய
நவையறு தந்தையும் நலம்விழை தாயாம்
மாபெரும் மாதும் வாழ்கவான் பதியில்.
சீர்பெரும் மரபும் சிறப்புடன் வாழ்க.
தவாவறி வுடையோர் தங்கள்கண் மணியாம்
சுவாமிக்கண் ணென்னும் சுந்தர நாம!
வாழ்கநின் அறிவே வாழ்கநின் பெரும்புகழ்
வாழ்கநின் பொற்குணம் வாழ்கநின் சீரே!

M. KANDASWAMI MUDALIAR, B.A.,

Pachaiyappa's College, Madras.

II

(1) சீரிலங்கும் பல்கலையும் செழித்தோங்கு
திருத்தலமாச் சிறப்புவாய்ந்து
காரிலங்கும் பல்வளங்கள் மல்கியெந்த
நாட்டினருங் களிக்கநல்கிப்
பாரிலங்கும் பன்னாட்டின் திலகமென
வயங்குமிந்தப் பண்பார்நாட்டிற்
கோரிலங்கு மாபரணமாஞ் சுவாமிக்
கண்ணுவள்ளால் உலகில்வாழ்க!

(2) பாவலர்கள் போற்றுகின்ற தலைநகராஞ்
சென்னைதனில் பாசுந்தேச
ஏவலர்கள் எனும்பிரதி நிதிகணிறை
சட்டசபைக் கேற்றஞான

நாவலியும் நற்றிறனு முடையார்நின்
போலில்லை நாட்டிலென்றே
காவலரு முணர்ந்துனையே தலைவனென
வாக்கினர்நீ களித்துவாழ்க !

(3) ஆதரஞ்சே ரிந்நகரக் கிருஸ்துவர்கள்
நின்பதவிக் ககமகிழ்ந்தே
ஓதிடும்வாழ்த் துரைத்துன்னை யுபசரிப்பா
ணிவண்வந்தோம் உண்மைஞான
சோதிபர னருள்பெருகத் தூயமறை
நெறியொழுகுஞ் சுவாமிக்கண்ணு
மேதகுபேர் பூண்டவனே மேதினியில்
வரமனைத்து மேவிவாழ்க !

(4) அணிகல்வி கரையிலவென் றறையுமொழி
யறிந்தின்றி யமையாநூல்கள்
துணிவொடுகற் றேபலவாம் பாஷைகளு
முணர்ந்துயர்வாச் சொல்லுகின்ற
கணிதமிகு வானசாஸ் திரமென்னுங்
கலைகளெல்லாங் கற்றுச்சூடா
மணியெனவே கலைவல்லார் தமில்விளங்கு
மதிவலனீ மகிழ்ந்துவாழ்க !

(5) கற்றவரு மற்றவருங் காவலரும்
பாவலருங் கருணைமேவு
நற்றவருங் குருமாரும் புகழ்ந்துரைசெய்
நற்குணங்கள் நாளுமோங்கப்
பெற்றவனே சீர்மிகுந்த பெருந்தகையே
உண்மைநெறி பிறழாப்பக்தி
யுற்றவனே உத்தமனே உவமையிலு
தாரநனி யுடையாய்வாழ்க !

(6) பன்னலரும் பொறைசாந்தம் கண்ணோட்டம்
வெகுளாமை பரிவுதாழ்மை
ஒன்னலரும் மெச்சுகின்ற மாண்புடைமை
தயைவாய்மை ஒருங்குவாய்ந்து
முன்னலருங் கமலமென முகமொளிரும்
தகவுடையாய் முதிர்ந்த வின்பக்
கன்னலரும் பாகெனச்சொற் பொழிவுநிகழ்த்
திடும்பெரியோய் கதிரின் வாழ்க!

(7) ஆங்கிலரி னூழியத்தில் அரியபல
உயர்பதவி அடைந்ததன்றி
ஓங்குபுகழ் கலெக்டரென ஜில்லாவை
யாண்டினிய வுத்தியோகம்
தீங்கறவே பார்த்தாட்சி யாளர்மெச்சி
யுனைப்போற்றச் சிறந்துநின்றாய்
பாங்குநிறை யுனக்கிறைவன் அருள்பெருக
நீசெழித்துப் பாரில் வாழ்க!

(8) சட்டமியற் றவைநடுவி னமர்ந்துநடு
நாயகமாய்த் தாழ்வொன்றின்றி
இட்டமுடன் பாராளு மன்றினட
வடிக்கையறிந் திருப்பதாலே
திட்டமுட னெவருமிறும் பூதெய்த
நடத்திடுவீர் திருமிக்கோங்கப்
பட்டமுட னிதுபோன்ற அரும்பதவி
பலபெற்றுப் பாரில்வாழ்க!

(9) பலகலையுந் திரண்டுருவாய்ப் பாவலர்க்கு
ளேசிறந்தாய் பாங்குபெற்ற
அலகிலரு மறிவுடையாய் அரசியலி
னவைக்கணியாய் அருள்சிறந்த

திலகமெனப் புகழோங்கி நிற்குமுன
துயர்பெருமை தெரியார்யாரே ?
சிலகலைதே ரெம்மால்நின் மகிமைசொலற்
கெளிதோநீ செழித்துவாழ்க !

(10) சீர்மலியுஞ் சென்னைநகர் செய்தவமோ
அன்றியதிற் சேர்ந்துவாழும்
ஏர்மலியுங் கிருஸ்துவர்க ளியற்றும் அறத்
தின்பலனோ இசை சிறந்த
பேர்மலியும் நீயெமது தலைவனென
அமர்ந்தாய்தேன் பிலிற்றுகின்ற
தார்மலியும் மலருனக்கு நாங்களணிந்
தோம்நீயுந் தாங்கிவாழ்க !

S. SELVARAJU REDDIYAR, B.A., L.T.,
St. Gabriel's High School, Madras.

முற்றிற்று.

600 008
126420

Diwan Bahadur

L. D. Swamikannu Pillai, C.I.E., I.S.O.

THE HON'BLE PRESIDENT

OF

THE MADRAS LEGISLATIVE COUNCIL

Speech fails when the heart is full; but speak we must
In praise of the Lord whose mercy has been great
In setting as the coping-stone of state
One of a spotless life and wise and just!

How oft mid storms and struggles, we distrust
God's holy plan, speak in despair, of Fate,
Of thriving vice, and virtue laid prostrate!
But now, praise we the Lord, who is Good and Just!

In this one noble life, we see restored
Our faith in treading slow with pain, the road
That leads to the narrow gate; for like the tree
By rivers of water planted, you shall be
O Scholar-Christian, who has ever trod
The great white road for greater glory of God!

T. B. KRISHNASWAMI MUDR., M.A., B.L.,

Govt. College, Kumbakonam.

"சத்திய நேசன்."

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

"சத்திய நேசன்" எனும் மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகையொன்றை 1926 ௵ ஜனவரி ௴ முதற்கொண்டு ஆரம்பித்துள்ளோம். இது சிறப்பாக, கிறிஸ்துவர்களின் சமூகாபி விருத்தியையும், பொதுவாக, நாட்டின் பொதுநலத்தையும் பொது அறிவுவிருத்தியையும் கோரி ஆரம்பிக்கப்பட்டது. இதற்குக் கற்றறிந்த பெரியோர், வித்வான்கள் முதலாயினோர் விஷயதானம்செய்து வருகின்றார்கள். அரிய பெரிய விஷயங்கள் இதில் வெளிவரும். இது தமிழ்க் கிறிஸ்துவர்க்கேயன்றி, தண்டமிழ் மொழியில் ஆர்வங்கொண்டுள்ள ஏனையோர்க்கும் இன்பந் தரத்தக்கதாகும். தமிழபிமானிகள் ஒவ்வொருவரும் வாசித்துப் பயனடையக்கூடிய அரிய பத்திரிகை இஃதே. இதனைப் பார்க்கவிரும்புவோர் பின்கண்ட விலாசத்துக்கு எழுதிக்கொண்டால் மாதிரிப் பிரதி இனாமாக அனுப்பப்படும். வருஷ சந்தா தபாற்செலவு உட்பட உள்நாடுகளுக்கு ரூபாய் ஒன்றே: வெளிநாடுகளுக்கு ரூ. **1—4—0.**

SELVAM & CO.,
Catholic Book-sellers
& Publishers,
Saint Thomas' Mount,
MADRAS.

செல்வம் & கம்பெனி,
கத்தோலிக்கு புத்தக வியாபாரிகள்
பிரசுரக் கர்த்தர்கள்,
480, சில்வர் தெரு, பரங்கிமலை,
(மதராஸ்.)

Solden & Co., Madras, S.E.